தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வலர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

PRGI No. TNBIL/25/A1569
வைகறையில்
# பேப்பர்பாய்
www.paperboy.biz
VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 184 15.02.2026 ஞாயிற்றுக்கிழமை ›› Chennai ›› Volume: 01 ›› Issue: 184 ›› Sunday ›› pages 8 ›› Rs.5/-
DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

ஞாயிற்றுக்கிழமை
(15–02–2026)
விசுவாவசு ஆண்டு, மாசி–3
பிறை: தேய்பிறை
திதி
திரயோதசி மாலை
5.50 வரை பிறகு சதுர்த்தசி
நட்சத்திரம்:
உத்திராடம் இரவு 8.36
வரை பிறகு திருவோணம்
யோகம்
அமிர்தயோகம்
ராகுகாலம்
மாலை 4.30–6.00 மணி
எமகண்டம்
நண்பகல் 12.00–1.30 மணி.
சூலம் – மேற்கு
நல்ல நேரம் :
காலை 7–8 மணி.
மாலை 3–4 மணி

மேஷம் ................ மாற்றம்
ரிஷபம் ..................... நலம்
மிதுனம் .................... சுகம்
கடகம் ................ அமைதி
சிம்மம் ................. ஆர்வம்
கன்னி ....................முயற்சி
துலாம் ..................... தனம்
விருச்சிகம் ........... தாமதம்
தனுசு .................. ஆக்கம்
மகரம் .................. இன்பம்
கும்பம் ............. வெகுமதி
மீனம் ................ உழைப்பு

# ‘வளர்ந்த இந்தியா’ பயணத்தில் காலனித்துவ மனநிலை வேண்டாம்

## பிரதமர் மோடி வலியுறுத்தல்

புதுடில்லி,பிப்.15:

தில்லியில் புதிய பிரதமர் அலுவலகம் (சேவா தீர்த்) மற்றும் முக்கிய அமைச்சக அலுவலகங்களை உள்ளடக்கிய கடமை பவன் 1, 2 ஆகிய புதிய வளாகங்களை வெள்ளிக்கிழமை திறந்துவைத்துப் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

தில்லி சென்ட்ரல் விஸ்டா பகுதியில் மத்திய அரசின் முக்கிய அலுவலகங்கள் மற்றும் அமைச்சகங்கள் பல்லாண்டுகளாக வெவ்வேறு இடங்களில், பழைமையான கட்டடங்களில் செயல்பட்டுவந்த நிலையில், சென்ட்ரல் விஸ்டா மறுமேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எதிர்காலத்துக்கு ஏற்ற நவீன வசதிகளுடன் கட்டப்பட்ட புதிய பிரதமர் அலுவலக வளாகம் மற்றும் முக்கிய அமைச்சக அலுவலகங்களை உள்ளடக்கிய கடமை பவன் 1, 2 வளாகங்களை பிரதமர் மோடி வெள்ளிக்கிழமை திறந்துவைத்தார்.

கடமை பவன் வளாகங்களில் சட்டம், பாதுகாப்பு, நிதி, சுகாதாரம், வேளாண்மை உள்ளிட்ட அமைச்சக அலுவலகங்கள் அமைந்துள்ளன. இரு வளாகங்களும் டிஜிட்டல் முறையில் ஒருங்கிணைக்கப்பட்ட வசதிகளைக் கொண்டுள்ளன. அவற்றின் திறப்பு விழாவில், மத்திய அமைச்சர்கள், மூத்த அதிகாரிகள் இடையே பிரதமர் மோடி பேசியதாவது:


தற்போது திறக்கப்பட்டுள்ள சேவா தீர்த் மற்றும் கடமை பவன் வளாகங்கள், வளர்ந்த இந்தியாவை நோக்கிய பயணத்தில் முக்கிய மைல்கல் ஆகும். குடிமக்களை மையப்படுத்திய நிர்வாகம் மற்றும் நாட்டின் முன்னேற்றத்துக்கான நமது உறுதிப்பாட்டை இது பிரதிபலிக்கிறது.

இதுவரை பிரதமர் அலுவலகம், முக்கிய அமைச்சகங்கள் அமைந்திருந்த வரலாற்று ரீதியிலான தெற்கு மற்றும் வடக்கு பிளாக் கட்டடங்கள், ஆங்கிலேய பேரரசின் கோட்பாடுகளின் அடிப்படையில் கட்டப்பட்டவை. ஆனால், சேவா தீர்த் மற்றும் கடமை பவன் வளாகங்கள், நாட்டு மக்களின் லட்சியங்களை பூர்த்தி செய்யும் நோக்கில் கட்டப்பட்டுள்ளன. இங்கு எடுக்கப்படும் முடிவுகள், ஒரு மன்னரின் விருப்பத்தை பிரதிபலிப்பதாக அல்லாமல், 140 கோடி மக்களின் லட்சியங்களையும் முன்னெடுக்க அடித்தளமாக விளங்கும். இந்த மகத்தான உணர்வுடன், புதிய வளாகங்களை நாட்டு மக்களுக்கு அர்ப்பணிக்கிறேன்.

அடிமைத்தனத்தின் சின்னங்கள்: சுதந்திரத்துக்குப் பிறகு நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்கும் பல முக்கிய முடிவுகளும், கொள்கைகளும் தெற்கு-வடக்கு பிளாக் கட்டடங்களில் மேற்கொள்ளப்பட்டன. அதேநேரம், இந்தக் கட்டடங்கள் ஆங்கிலேய ஆட்சியின் சின்னங்களாகவே கட்டப்பட்டன என்பதை நினைவில் கொள்ள வேண்டியுள்ளது. ஆங்கிலேய ஆட்சியில் நாட்டின் தலைநகர் கொல்கத்தாவில் இருந்து பிரிட்டன் அரச குடும்ப விருப்பங்களின்படி நிர்மாணிக்கப்பட்ட தில்லி ரெய்சினா ஹில்ஸ் கட்டடங்களுக்கு மாற்றப்பட்டது. நாடு சுதந்திரமடைந்த பிறகும் அடிமைத்தனத்தின் சின்னங்கள் நீடிப்பது துரதிருஷ்டவசமானது.

வளர்ந்த பாரதத்தை நோக்கி பயணிக்கும்போது, காலனித்துவ மனநிலையின் ஒவ்வொரு தடயங்களில் இருந்தும் நாம் விடுபடுவது அவசியம். அடிமை மனப்பான்மையைப் புறந்தள்ளிவிட்டு, முன்னேற்றப் பாதையில் பயணிக்க வேண்டியுள்ளது.

லட்சியங்கள் வெல்லும்: வேதங்கள் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கும் விஜய ஏகாதசி நன்னாளில் (பிப்.13), நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் புதிய தொடக்கம் பிறந்துள்ளது; புதிய வரலாறு படைக்கப்பட்டுள்ளது. இந்த நாளில் ஏற்கப்படும் லட்சியங்கள் நிச்சயம் வெற்றி பெறும். வளர்ந்த இந்தியாவை கட்டமைக்கும் உறுதிப்பாட்டுடன் சேவா தீர்த் மற்றும் கடமை பவன்களுக்குள் நுழைந்துள்ளோம். நமது இலக்குக்கு தெய்வீக ஆசி உள்ளது.



பிரதமரின் அதிகாரபூர்வ இல்லம் அமைந்துள்ள தெருவின் பெயர் ரேஸ்கோர்ஸ் சாலை என்பதில் இருந்து லோக் கல்யாண் மார்க் என மாற்றப்பட்டது. இது வெறும் பெயர் மாற்றம் மட்டுமல்ல, அதிகார மனப்பான்மையை சேவை உணர்வாக மாற்றும் முயற்சி.

மறுபெயரிடும் முன்னெடுப்புகள், வெறும் வார்த்தை மாற்றங்களைக் குறிப்பதல்ல. சுதந்திரமான இந்தியாவின் சுதந்திரமான அடையாளத்தை குறிப்பவை. அடிமைச் சங்கிலியில் இருந்து விடுபடுவதன் அடையாளம் என்றார் பிரதமர் மோடி.

## கிராமங்கள் முதல் நகரங்கள் வரை நம்பிக்கையின் குரலாக ஒலிக்கிறது வானொலி

தொலைதூர கிராமங்கள் தொடங்கி பரபரப்பான நகரங்கள் வரை மக்களின் நம்பிக்கையின் குரலாக வானொலி ஒலிக்கிறது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

உலக வானொலி தினம் ஆண்டுதோறும் பிப். 13-ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. இதையொட்டி வெள்ளிக்கிழமை அவர் வெளியிட்ட ‘எக்ஸ்’ பதிவில், ‘நாட்டின் தொலைதூரத்தில் உள்ள கிராமங்கள் தொடங்கி, மிகவும் பரபரப்பாக இயங்கி வரும் நகரங்கள் வரை மக்களின் நம்பிக்கையின் குரலாக வானொலி திகழ்கிறது. அனைத்து இடங்களுக்கும் தகவல்களை உரிய நேரத்தில் கொண்டுசெல்லும் ஊடகமாக வானொலி உள்ளது. திறமைகளை மேம்படுத்துவது, புத்தாக்க முயற்சிகளை ஊக்குவிப்பது என அனைத்து நிலைகளிலும் மக்களுக்காக வானொலி சேவையாற்றி வருகிறது.

நான் மாதம்தோறும் வானொலியில் ‘மனதின் குரல்’ நிகழ்ச்சி மூலம் மக்களுடன் பேசி வருகிறேன். அதன்மூலம் வானொலி எந்த அளவுக்கு மக்களுடன் தொடர்பில் உள்ளது என்பதைத் தெரிந்து கொள்ள முடிந்தது. அந்த நிகழ்ச்சி மூலம் நாட்டு மக்களுடன் தொடர்பு கொண்டு சமூகத்தை வலுப்படுத்த முடிகிறது. இந்த மாதம் வரும் 22-ஆம் தேதி வானொலியில் உரையாற்ற இருக்கிறேன்’ என்றார்.

கடந்த 2014 அக்டோபர் முதல், அதாவது பிரதமர் மோடி பதவியேற்ற சில மாதங்களில் இருந்து மாதம்தோறும் அவர் வானொலியில் நாட்டு மக்களுக்கு உரையாற்றி வருகிறார். இதில் பெண்கள் மேம்பாடு, சமூக சேவை, தூய்மை இந்தியா திட்டம், நீர்ப் பாதுகாப்பு, விளையாட்டு, ஆன்மிகம் என பல தலைப்புகளில் பிரதமர் பேசி வருகிறார். சமூகத்துக்காக சேவையாற்றும் எளிய மக்களையும் அவர் அடையாளம் கண்டு இந்த நிகழ்ச்சி மூலம் பாராட்டுவதையும், உரையாடுவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளார். இந்த வானொலி நிகழ்ச்சியில் பிரதமர் பேச வேண்டிய விஷயங்கள் குறித்து பொதுமக்களும் இணையதளம் மூலம் கருத்து தெரிவிக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2011-ஆம் ஆண்டு யுனெஸ்கோவால் பிப்ரவரி 13-ஆம் தேதி உலக வானொலி தினமாக அறிவிக்கப்பட்டது. 1946-ஆம் ஆண்டு ஐ.நா. வானொலி பிப்ரவரி 13-ஆம் தேதி தொடங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## விஜய் ஒரு தொகுதியில் கூட வெற்றிபெற முடியாது; பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன்



சென்னை,பிப்.15:


தவெக தலைவர் விஜய் இன்று சேலத்தில் நடைபெற்ற தவெக நிர்வாகிகள் சந்திப்பு கூட்டத்தில் பங்கேற்றார். தவெக நிர்வாகிகள் மத்தியில் பிரசார வேனில் நின்றபடி பேசிய விஜய், திமுக, அதிமுகவை விமர்சித்தார்.

இந்நிலையில், சென்னை விமான நிலையத்தில் பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது, அவரிடம் விஜய் குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அந்த கேள்விக்கு பதில் அளித்த நயினார் நாகேந்திரன் கூறியதாவது,

விஜய் அரசியலில் அனுபவம் இல்லாதவர். அவர் முதலில் வீட்டில் இருந்து வெளியே வர வேண்டும். குடும்பத்துடன் நல்ல உறவு வைக்க வேண்டும். நல்ல தலைவர்கள் வழிநடத்திய இயக்கத்தை நல்ல முறையில் கூற வேண்டும்.

கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவர் வானம் ஏறி வைகுண்டம் போக முடியுமா? இதுதான் விஜய்க்கு பதில். 32 சதவீத வாக்கு உள்ளது என்று நடிகராக உள்ள விஜய் கூற முடியுமா? விஜய் எனக்கு ஒரு ஆளே கிடையாது. கூட்டம் இருந்தால் என்ன வாக்கு வேண்டாமா? விஜயகாந்திற்கு கூடாத கூட்டமா? வாக்கு வேண்டாமா? விஜய் ஒரு தொகுதியில் கூட வெற்றிபெற முடியாது.

## அடுத்த 5 ஆண்டுகளில் மேலும் 50 விமான நிலையங்களை உருவாக்க இலக்கு: மத்திய அரசு




புதுடில்லி,பிப்.15:

தில்லியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற தேசிய நகர்ப்புற மற்றும் ரியல் எஸ்டேட் மேம்பாட்டு மாநாடில் பங்கேற்ற மத்திய அமைச்சர் ராம்மோகன் நாயுடு பேசியதாவது:

ரியல் எஸ்டேட் துறை வளர்ச்சியில் விமான நிலையங்களுக்கும் முக்கியப் பங்கு உள்ளது. விமானப் போக்குவரத்து சந்தையில் உலகின் வேகமாக வளர்ந்துவரும் நாடான இந்தியாவில் தற்போது 165 விமான நிலையங்கள் பயன்பாட்டில் உள்ளன. நாட்டில் சராசரியாக 33 நாள்களுக்கு ஒரு புதிய விமான நிலையம் அல்லது முனையம் கட்டப்பட்டு வருகிறது.

அடுத்த 5 ஆண்டுகளில் மேலும் 50 புதிய விமான நிலையங்களை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது, நாட்டின் ரியல் எஸ்டேட் துறைக்கு மிகப் பெரிய வாய்ப்புகளை உருவாக்கித் தரும்.

விமான நிலையங்களுக்கு அருகே உயரமான கட்டடங்களுக்கு உள்ள கட்டுப்பாடுகள் விவகாரத்தில், விமானப் போக்குவரத்து பாதுகாப்பை சமரசம் செய்யாத வகையில் உரிய தீர்வு காண்பது தொடர்பாக தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றார்.

மேலும், நாட்டின் ரியல் எஸ்டேட் துறையின் வளர்ச்சிக்கான திறன் குறித்து குறிப்பிட்ட மத்திய அமைச்சர், ‘இத் துறையின் மதிப்பு வரும் 2030-இல் ஒரு டிரில்லியன் டாலர் (ரூ. 91 லட்சம் கோடி) மதிப்புக்கும், 2047-ஆம் ஆண்டுக்குள் 5 முதல் 7 டிரில்லியன் டாலர் மதிப்பு (ரூ. 453 லட்சம் கோடி முதல் ரூ. 634 லட்சம் கோடி) அளவுக்கும் உயரும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இத்தகைய சூழலில், ரியல் எஸ்டேட் மேம்பாட்டில் மக்களின் தரமான வாழ்வுக்கு கவனம் செலுத்துவது முக்கியமானதாகும்.

வாடகை வீடுகள், குறிப்பாக இளைஞர்களுக்கு வீடுகளை வாடகைக்கு விடும் திட்டங்களை ரியல் எஸ்டேட் துறை மேம்படுத்துவது அவசியமாகும்’ என்றும் குறிப்பிட்டார்.

## சென்னை விமான நிலையத்தில் ரூ.3 கோடி மதிப்புள்ள உயர்ரக கஞ்சா பறிமுதல்

சென்னை,பிப்.15:

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்துக்கு தாய்லாந்து நாட்டு தலைநகர் பாங்காக்கில் இருந்து விமானம் வந்தது. வடமாநிலத்தை சேர்ந்த 30 வயது வாலிபர், சுற்றுலா விசாவில் தாய்லாந்துக்கு சென்றுவிட்டு திரும்பி வந்திருந்தார்.

அவர் மீது சந்தேகம் அடைந்த சுங்க இலாகா நுண்ணறிவு பிரிவு அதிகாரிகள், அவரிடம் இருந்த உடைமைகளை சோதனை செய்தனர். அவரது சூட்கேசுக்குள் செல்பி முறையில் வீடியோ எடுக்கக்கூடிய தானியங்கி புகைப்பட கருவி இருந்தது. மேலும் 8 பதப்படுத்தப்பட்ட உணவு பாக்கெட்டுகள் இருந்தது.

அவற்றை பிரித்து பார்த்தபோது ஹைட்ரோபோனிக் என்ற பதப்படுத்தப்பட்ட உயர்ரக கஞ்சா 3 கிலோ மறைத்து வைத்திருந்ததை கண்டுபிடித்தனர். இதன் மதிப்பு சுமார் ரூ.3 கோடி இருக்கும் என கூறப்படுகிறது. சுங்க இலாகா அதிகாரிகள் கஞ்சாவை கடத்தி வந்த வாலிபரை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

## குரூப்-2 தேர்வு ரத்து விவகாரம்: 5 அதிகாரிகள் இடைநீக்கம்

சென்னை,பிப்.15:

தேர்வு மைய ஒதுக்கீடு குளறுபடியால் தமிழகம் முழுவதும் டிஎன்பிஎஸ்சி குரூப்-2 மெயின் தேர்வு ரத்து செய்யப்பட்ட விவகாரத்தில், சார்பு-செயலர் உள்ளிட்ட 5 அதிகாரிகள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். ஒரு துணை செயலர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சார் -பதிவாளர், உதவி தொழிலாளர் ஆய்வாளர், சிறைத்துறை நன்னடத்தை அலுவலர், முதுநிலை வருவாய் ஆய்வாளர் உள்ளிட்ட பதவிகளுக்கான குரூப்-2 மற்றும் குரூப்-2ஏ மெயின் தேர்வுகள் கடந்த பிப்.8-ம் தேதி நடக்க இருந்தன.

தமிழகத்தின் மற்ற பகுதிகளில் தேர்வுகள் தொடங்கிய நிலையில், சென்னையில் அரும்பாக்கம் டி.ஜி.வைஷ்ணவா கல்லூரி, நந்தனம் அரசு கலைக் கல்லூரி ஆகிய மையங்களில் தேர்வர்களுக்கு இடங்கள் ஒதுக்குவதில் குளறுபடி ஏற்பட்டது. இதன் காரணமாக, தமிழகம் முழுவதும் தேர்வு ரத்து செய்யப்பட்டது.

இதற்கு, அரசியல் கட்சித் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர். இந்நிலையில், இந்த விவகாரத்தில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை தொடர்பாக டிஎன்பிஎஸ்சி செயலர் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு: கடந்த பிப்.8-ம் தேதி நடக்க இருந்த ஒருங்கிணைந்த குரூப்-2, குரூப்-2ஏ மெயின் தேர்வுகள் தொழில்நுட்பக் காரணங்களால் ரத்து செய்யப்பட்டன. இந்த தேர்வுகளை மார்ச் 15-ம் தேதி காலை மற்றும் பிற்பகலில் மீண்டும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

தேர்வுகள் ரத்து செய்யப்பட்டது தொடர்பாக விரிவான விசாரணை நடத்தப்பட்டு, தொடர்பு உடையவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, முதல்கட்ட விசாரணையின் அடிப்படையில், ஒரு உதவி பிரிவு அலுவலர், ஒரு புரோகிராமர், 2 பிரிவு அலுவலர்கள், ஒரு சார்பு-செயலர் ஆகியோர் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். ஒரு துணைச் செயலர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் இதுபோன்ற தவறுகள் நடைபெறாமல் இருக்க கூடுதல் வழிமுறைகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

## மணிப்பூர் வன்முறை: 2 வாரங்களில் நிலை அறிக்கை தாக்கல் செய்ய சிபிஐக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு

மணிப்பூர்,பிப்.15:

மணிப்பூர் வன்முறை தொடர்பான விசாரணை நிலை அறிக்கையை 2 வாரங்களில் தாக்கல் செய்யுமாறு சிபிஐ-க்கு உச்சநீதிமன்றம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.

மணிப்பூரில் கடந்த 2023-இல் நடந்த வன்முறைச் சம்பவங்களில் 200-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கான மக்கள் தங்களின் இருப்பிடங்களைவிட்டு இடம்பெயர்ந்தனர். பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகளும் நிகழ்ந்தன.

இந்த வன்முறை மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் தொடர்பாக உச்சநீதிமன்ற உத்தரவின்பேரில் சிபிஐ விசாரணை மேற்கொண்டு வருகிறது.

மேலும், இந்தக் கலவரத்தில் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரண மற்றும் மறுவாழ்வுக்கான பணியைக் கண்காணிக்க உச்சநீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட நீதிபதி கீதா மிட்டல் குழுவை உச்சநீதிமன்றம் அமைத்தது. பதவிக் காலம் கடந்த ஆண்டு ஜூலையுடன் முடிவடைந்த நிலையில், அதன் பதவிக் காலத்தை வரும் ஜூலை 31-ஆம் தேதி வரை நீட்டித்து உச்சநீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டது.

## மாசி மாத பிறப்பு, வெள்ளிக்கிழமையை முன்னிட்டு நம் வாசவி அம்மன் சிறப்பு வழிபாடு



திருவண்ணாமலை, பிப்.15: திருவண்ணாமலை ஶ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் மாசி மாத பிறப்பை முன்னிட்டு, கணேஷ் ஐயர் அவர்களால் ஆதி அம்மனுக்கும், மூலவருக்கும், உற்சவருக்கும் சிறப்பு அபிஷேகங்கள், வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுகள் பாடி, மங்கள வாத்தியங்கள் இசைக்க, உற்சவரை அலங்கரித்து ஆலயம் சுற்றி வந்தன.

பின்னர் உற்சவர் ஊஞ்சல் உற்சவமும் வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுகள் பாடி, மங்கள வாத்தியங்கள் இசைக்க, பிரசாதம் நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது.

ஏராளமான ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் கலந்து கொண்டு ஶ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. இன்றைய உபயதாரர் P.சேகர் செட்டியார் அனுராதா அவர்கள் திருவண்ணாமலை.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஶ்ரீதர் திருவண்ணாமலை**

## நம் வாசவி அம்மன் வெண்ணெய் காப்பு அலங்காரத்தில், தெப்பல் உற்சவத்தில் சிறப்பு வழிபாடு



தஞ்சாவூர், பிப்.15: தஞ்சாவூர் ஶ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் மாசி மாதப் பிறப்பை முன்னிட்டு ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மனுக்கு சிறப்பு மூலவருக்கும் உற்சவருக்கும் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், வெண்ணெய் காப்பு அலங்காரத்துடன், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் , வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுகள் பாடி, உற்சவர் தெப்பல் உற்சவத்தில் அலங்காரத்துடன், மகாதீபாராதனையையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் தெப்பல் உற்சவத்தில் கலந்து கொண்டு வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மனை வேண்டி அருள் பெற்றனர் . அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஶ்ரீதர் திருவண்ணாமலை**

## கோணலூர் அருள்மிகு திருக்கோணேச்சுவரர் கோவில் கும்பாபிஷேக விழா அழைப்பு



விழுப்புரம், பிப்.15: விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அருகில் அமைந்துள்ள கோணலூர் அருள்மிகு திருக்கோணேச்சுவரர் திருக்கோவில் மஹா கும்பாபிஷேக விழா வருகின்ற ஞாயிற்றுக்கிழமை 22.2.2026 அன்று காலை சுமார் 7.00 மணியளவில் கருவறை, விமானங்களுக்கு திருக்குட நன்னீராட்டு பெருவிழாவும் மாலை6.00 மணியளவில் சுவாமி திருக்கல்யாணம் நிகழ்ச்சியும் புதுச்சேரி நெட்டப்பாக்கம் சுத்தாத்துவித சைவத் திருமடம் குருமுதல்வர் குமாரசாமி தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் ஆன்றோர்கள், சான்றோர்கள், ஊர் பொதுமக்கள் பங்கேற்ப்போடு வெகுவிமர்சையாக நடைபெறயுள்ளது.

**அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

## ஏனாதி செங்கோட்டை அங்காள பரமேஸ்வரி கோவிலில் மகா சிவராத்திரி விழா தொடங்கியது



மானாமதுரை,பிப் .15: சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே வைகை ஆற்று கரையில் உள்ள ஏனாதி செங்கோட்டையில் அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவிலில் மகா சிவராத்திரி விழா தொடங்கியது. இதையொட்டி கோவி லில் புனித நீர் கலசங்கள் வைத்து யாகம் நடத்தப் பட்டது.

அதைத் தொடர்ந்து திருவிழா தொடக்கமாக அம்மன் சன்னதி முன் மண்டபத்தில் உள்ள கொடி மரத்தில் அதிகாலையில் கொடியேற்றப்பட்டு கொடிமரத்திற்கு சிறப்பு பூஜைகள், தீபாராதனைகள் நடைபெற்றன.

அதன் பின்னர் அங்காள பரமேஸ்வரி அம்மனுக்கு புனித நீரால் அபிஷேகம் நடத்தி சந்தனக்காப்பு, வெள்ளிக்கவசம் அலங்காரம் செய்து சிறப்பு பூஜைகள் நடந்தது. கோவில் பூசாரி சண்முகசுந்தரம் கொடியேற்றம் மற்றும் மூலவர் சன்னதிக்கான பூஜைகளை நடத்தி வைத்தார்.

இதில் கோவில் அறங் காவலர் குழு நிர்வாகிகள் மற்றும் சுற்றுவட்டார கிராம மக்கள் திரளாக கலந்து கொண்டனர். தொடர்ந்து தேதி 18 ந்தேதி பொங்கல் படைப்புடன் நிறைவடைகிறது.

விழாவின் முக்கிய நிகழ்வாக இன்று இரவு கோவிலில் திரு விளக்கு பூஜை நடைபெற்று வைகையாற்றுக்குச் சென்று கரகம் எடுத்து வருதல், அம்மனுக்கு பச்சைவாழை



பரப்பி பூஜை செய்தல் நடைபெறுகிறது.

16ந் தேதி திங்கட்கிழமை பால்குடம் உற்சவம், பாரி வேட்டை வைபவம், 17ந் தேதி பொங்கல் விழா நடைபெறும். விழா நாள்களில் பல்வேறு பகுதிகளில் இருந்தும் கோவிலுக்கு வரும் பக்தர்கள் முடி காணிக்கை செலுத்தியும், பால்குடம் சுமந்தும், கரகம் எடுத்தும், தீச்சட்டி எடுத்து ஆடு, கோழிகளை பலியிட்டும் வேண்டுதல் நிறைவேற்றி அங்காள பரமேஸ்வரி அம்மனை தரிசனம் செய்வர்கள்.

விழாவிற்கான ஏற்பாடு களை கோவில் பூசாரி சண்முகசுந்தரம் அறங்காவலர் குழுவினர் மற்றும் கிராம மக்கள் செய்துள்ள னர். பக்தர்கள் வசதிக்காக மானாமதுரையில் இருந்து சிறப்பு பஸ்கள் வசதிகள் செய்யப்பட்டு உள்ளது.

## வாடிப்பட்டி பகுதியில் நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடம் பணம் வசூலிப்பதை தடுக்க வேண்டும்

### குறைதீர்க்கும் கூட்டத்தில் காரசார விவாதம்



வாடிப்பட்டி, பிப்.15: மதுரை மாவட்டம் வாடிப் பட்டி தாலுகா அலுவலகத்தில் மாதாந் திர விவசாயிகள் குறை தீர் க்கும் கூட்டம் நடந்தது. இந்த கூட்டத்தி ற்கு தாசில்தார் ராமச்சந்திரன் தலைமை தாங்கினார்.

வேளாண்மை உதவி இயக்குனர் பாண்டி, கால்நடை உதவி மருத்துவர் வைகறை செல்வி, பெரியார் பாசன கால்வாய் உதவி பொறியாளர் மொக்க மாயன் பொதுப்பணித்துறை உதவி பொறியாளர் செந்தில்குமார் பாசன ஆய்வாளர் முகமது சுல்தான், போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் திவ்யா, வனத்துறை அதிகாரி முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வருவாய் ஆய்வாளர் ராஜா வரவேற்றார்.

இந்த கூட்டத்தில் வாடிப்பட்டி பகுதியில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் எந்த கட்டணமும் செலுத்த தேவையில்லை என்று மாவட்ட ஆட்சியர் அறிவித்த பின்னர் அதை மீறி செயல்படு பவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று காரசாரமாக விவசாயிகள் வாக்குவாதம் செய்தனர்.

கிராமப்புறங்களில் ஜல்ஜீவன் திட்டத்தில் குடிநீர் குழாய்கள் பதிப்பு பணியில் முடிந்த பின் சிமென்ட் தரை, வண்ண கலர் கற்களில்காணப்படும் பள்ளங்களை சீரமைக்க வேண்டும் என்றும், சிறு குறுநில குத்தகைதாரர்களுக்கு நெல் கொள்முதல் நிலையங்களில் நெல்லினை அனுமதிக்க அடங்கல் வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகள் பற்றி விவாதிக்கப்பட்டது. முடிவில் ஆதிமுத்துக்குமார் நன்றி கூறினார்.

## கொடைக்கானலில் காதலர் தினத்தை கொண்டாட குவிந்த ஜோடிகள்



கொடைக்கானல், பிப்.15: உலகம் முழுவதும் இன்று காதலர் தினம்கொண்டாடப்படும் நிலையில் காதல் ஜோடிகள் சுற்றுலா தலங்களை நோக்கி படையெடுத்து வருகின்றனர். திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் சர்வதேச சுற்றுலா தலமாக விளங்கி வரும் நிலையில் காதலர் தினத்தை முன்னிட்டு இன்று காலை முதலே பல்வேறு ஊர்களில் இருந்து காதலர்கள் கொடைக்கானலுக்கு வந்தவண்ணம் உள்ளனர்.

மோட்டார் சைக்கிள், கார் மற்றும் பல்வேறு வாகனங்களில் அவர்கள் கொடைக்கானலுக்கு வந்து இங்குள்ள பிரையண்ட் பூங்கா, ஏரிச்சாலை, கோக்கர்ஸ் வாக், குணாகுகை உள்ளிட்ட பல்வேறு இடங்களை சுற்றி பார்த்தனர். மேலும் ஏரியில் அமர்ந்து படகு சவாரி செய்து செல்பி எடுத்து மகிழ்ந்தனர். பெரும்பாலான சுற்றுலா தலங்களில் காதல் ஜோடிகள் தனித்தனியாக அமர்ந்து காதல் ரசம் சொட்டச்சொட்ட பேசி மகிழ்ந்தனர்.

காதலர் தினம் என்றாலே அன்பை பரிமாறிக்கொள்ள பரிசுப்பொருட்கள் வழங்கு வது வழக்கம். அதில் ரோஜாவுக்கு முதலிடம் உண்டு. கொடைக்கானல் மலை கிராமங்களான குண்டுபட்டி, கவுஞ்சி, மன்னவனூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பல ஏக்கர் பரப்பளவில் நர்சரி அமைத்து காரநேசன், கொய்மலர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கிருந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும், வெளி மாநிலங்களுக்கும் ரோஜா பூக்கள் அனுப்பி வைக்கப்படுகிறது. காதலர் தினத்தை முன்னிட்டு கடந்த சில நாட்களாகவே ரோஜா பூக்கள் அனுப்பி வைக்கும் பணி விறுவிறுப்பாக நடந்தது. 10 பூக்கள் கொண்ட ஒரு பூங்கொத்து ரூ.100க்கு விற்பனையான நிலையில் இன்று காலையில் ரூ.200க்கு விற்கப்பட்டது. நேரம் செல்லச்செல்ல அந்த பூக்களும் விற்று தீர்ந்ததால் ரூ.50 முதல் ரூ.150 வரை விற்கப்பட்டது. இதனால் தாமதமாக வந்த காதலர்கள் தங்களுக்கு ரோஜா கிடைக்க வில்லையே என ஏமாற்றம் அடைந்தனர்.

இதைத்தவிர வேறு சில பரிசு பொருட்களையும் காதல் ஜோடிகள் வாங்கி பரிசளித்து மகிழ்ந்தனர். இதேபோல் மாவட்டத்தில் முக்கிய சுற்றுலா தலமாக விளங்கும் திண்டுக்கல் மலைக் கோட்டை, சிறுமலை உள்ளிட்ட பகுதிகளிலும் காதல் ஜோடிகள் குவிந்து தங்கள் பொழுதை கழித்தனர்.

ஆண்டிபட்டி வைகை அணை பூங்காவில் வழக்கமாக அதிக அளவு சுற்றுலா பயணிகள் வருகை தரும் நிலையில் நேற்று காதலர் தினத்தை முன்னிட்டு காலை முதலே பலர் வரத்தொடங்கினர். காதல் ஜோடிகள் பொது இடங்களில் சுற்றினாலோ, பூங்காவில் அமர்ந்து பொழுதை கழித்தாலோ அவர்களுக்கு திருமணம் செய்து வைக்கப்படும் என இந்து அமைப்பினர் தெரிவித்தனர். இதனால் பூங்காவில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. காதலர் தினத்துக்கு ஆதரவாகவும், எதிராகவும் இரு வேறு தரப்பினர் பூங்காவிற்குள் வரத்தொடங்கியதால் பரபரப்பு ஏற்பட்டது.

## தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இளையான்குடி பேரூராட்சி முன்னாள் தலைவர் செய்யதுஜமீமா நன்றி



சிவகங்கை, பிப்.15: சிவகங்கை மாவட்டம் இளையான்குடி பேரூராட்சி யில்எட்டாவது வார்டு கவுன்சிலர் முன்னாள் பேரூராட்சி தலைவர் கே ஏ. செய்யதுஜமீமா எட்டாவது வார்டு மகளிர்களின் சார்பாக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றிகளை தெரிவித்து மாண்புமிகு முதல்வர் மகளிர் உரிமைத்தகையை மொத்தமாக 5000 கொடுத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என கூறி வார்டுகளில் வசிக்கும் பொதுமக்கள் வீடுகளுக்கு சென்று குடும்ப தலைவிகளுக்கு இனிப்புகள் வழங்கி திமுக அரசின் மக்களுக்கான திட்டங்களை கூறி தமிழக முதல்வர் மு. க . ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சி மீண்டும் வரவேண்டும் என பிரச்சாரம் செய்தார்.

## வலங்கைமான் ருக்மணி மஹாலில் Fire and Safety விழிப்புணர்வு Training programme



திருவாரூர், பிப்.15: வலங்கைமான் ருக்மணி மஹாலில் நேற்று 14.02.2026 அன்று Fire and Safety விழிப்புணர்வு Training programme நடைபெற்றது . இதில் 144. GPTC வலங்கைமான் பாலிடெக்னிக் NSS மாணவர்கள் 100 பேருக்கு மேல் கலந்து கொண்டு சிறப்பித்து பயிற்சி பெற்றனர்.

NSS ஒருங்ணைப்பாளர்கள் இரா. சீத்தாராமன். மற்றும் டாக்டர் ரெங்க துரை கலந்து கொண்டு மாணவர்களை வழி நடத்திச் சென்றனர் . அதிகாரி பார்த்திபன் Fire and Safety பற்றி விளக்கிக் கூறினார்கள் .

## பல்லடத்தில் ஜவுளி உற்பத்தியாளர்களிடம் தி.மு.க., தேர்தல் அறிக்கை குழுவினர் கருத்துக்கள் கேட்பு



பல்லடம், பிப்.15: தமிழக சட்டமன்ற தேர்தலையொட்டி தி.மு.க. சார்பில் தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்காக தி.மு.க. மகளிர் அணி செயலாளர் கனிமொழி எம்.பி., தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவினர் தமிழகம் முழுவதும் மாவட்டம் தோறும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வியாபாரிகள், விவசாயிகள், தொழில்முனைவோர், பொதுமக்கள் ஆகியோரிடம் கருத்துக்களை கேட்டறிந்து வருகின்றனர்.

இக்குழு சார்பில் திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களை சேர்ந்த பொதுமக்கள், தொழில் முனைவோரிடம் கருத்து கேட்பு கூட்டம் திருப்பூர் மாவட்டம் பல்லடம் காரணம்பேட்டையில் உள்ள ஶ்ரீவெங்கடேஸ்வரா மகாலில் நேற்று நடைபெற்றது.

இதில் 2 மாவட்டங்களை சேர்ந்த தொழில் அமைப்பினர், ஜவுளி உற்பத்தியாளர்கள், கறிக்கோழி உற்பத்தியாளர்கள், விசைத்தறியாளர்கள், வணிகர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு தங்களது கோரிக்கைகளை மனுக்களாக வழங்கினர். கனிமொழி எம்.பி., பங்கேற்காததால் அமைச்சர்கள் முத்துசாமி ,கோவி.செழியன், கயல்விழி, முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி, திருப்பூர் சட்டமன்ற உறுப்பினர் செல்வராஜ், மாநகராட்சி மேயர் தினேஷ்குமார் ஆகியோர் மனுக்களை வாங்கி கருத்துக்களை கேட்டறிந்தனர்.



Breaking NEWS Card.com
www.breakingnewscard.com
BREAKING NEWS
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
₹999 ONLY




ADVERTISE WITH US
CONTACT US
9438610756




Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY
WEBSITE
RS.999/-
Call/Whatsapp - +91 7789951009




FREE MARRIAGE INFORMATION CENTER :
இலவச திருமண தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889




FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY OR SELL
PROPERTY OR LAND?
+91 9884417843




Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com




THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale ..
Residential / Commercial ..
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005




Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE




ANY MLM PLAN
INR PLAN
RS.20000
CRYPTO PLAN
RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247




Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599




Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs




ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601




just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com




Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com




CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.




Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009





அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..
www.arultharumdeivam.com




S.R
Call Drivers Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.



## கவிதை அரங்கம்!



இன்றைய சிறு முடிவு
நாளை அனைத்தையும்
மாற்ற முடியும்

முயற்சி என்னும்
படிக்கட்டில் ஏறினால்
தான் வெற்றி என்னும்
இலக்கை அடைய முடியும்

மாற்றி யோசனை
செய்யாமல்
மாற்றங்கள் வருவதில்லை

எனது வெற்றிக்கு காரணம்
நான் எப்போதும் எனது
தோல்விகளுக்கு என்னைத்
தவிர வேறு எந்த
காரணத்தையும்
கூறுவதில்லை

நமக்கான ஆறுதல்
என்பது நம்மிடம்
தான் உள்ளது
மறந்து போவதும்
கடந்து செல்வதும்

## வாழ்க்கை தத்துவம்...




ஒவ்வொரு அனுபவமும்
வாழ்க்கையின் புதிய பாடம்
அதை ஏற்றுக் கொள்ளும்
மனமே வளர்ச்சி

நாம் தேர்வு செய்யும்
எண்ணங்கள் தான்
நாளைய வாழ்க்கையின்
வடிவத்தை உருவாக்கும்

நடக்கும் பாதை
தெரியாமல் இருந்தாலும்
நம்பிக்கையுடன் எடுத்த
ஒரு படி கூட வாழ்க்கையை மாற்றும்

நொடிகள் சேர்ந்து தான்
நாட்கள் ஆகின்றன
அதுபோல் சிறு முயற்சிகள்
சேர்ந்து தான் வாழ்க்கை உருவாகிறது

# "சிவராத்திரியின் மகிமை"



காசி காரில் திருவண்ணாமலைக்கு சென்று கொண்டிருந்தான். வழியில் கார் சிக்னலில் மாட்டிக் கொண்டது .ஒவ்வொரு சிக்னலிலும் மாட்டிக் கொள்கிறோமே !நேரம் ஆக ஆக டிராபிக் ஜாம் ஆயிடுமே! திருவண்ணாமலைக்கு போக குறைந்தது 5 மணி நேரமாவது ஆகிவிடுமே !என்று மனதிற்குள்ளேயே பேசிக் கொண்டிருந்தான். காசி ஒவ்வொரு பௌர்ணமிக்கும் கிரிவலம் செல்வது அவனது வழக்கம். இம்முறை சிவராத்திரிக்கு அண்ணாமலையார் கோவிலுக்கு சென்று தரிசனம் செய்து நான்கு கால பூஜைகளிலும் கலந்து கொண்டு சிவனின் அருளை பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் புறப்பட்டான் .சிக்னல் எப்பொழுது கிடைக்கும் என்று நிமிஷத்தையே பார்த்துக் கொண்டிருந்த சமயத்தில், வயதான தாத்தா ஒருவர் சாலையை மெதுவாக கடந்து சென்று கொண்டிருந்தார் .பாதி ரோடு செல்லும் போது கிரீன் சிக்னல் விழுந்துவிட்டது. காரின் அருகிலேயே அவர் சென்றதால் காரை உடனே நகர்த்த முடியவில்லை. பின்னால் உள்ளவர்கள் ஹாரன் சப்தம் எழுப்பினர். தாத்தா காரை கடந்த உடன் காரை வலது புறமாக கொஞ்சம் நகர்த்தி ஓட்ட முயற்சித்தார் காசி. அப்போது திடீரென பின்னால் இருந்து டூவீலரில் வந்த ஒருவன் காரின் மீது மோதி நடுரோட்டில் விழுந்தான். கீழே விழுந்தவுடன் ஹெல்மெட் கழண்டு வேறு ஒரு பக்கம் ஓடியது .மண்டையில் அடிபட்டு ரத்தம் வழிந்தது .எல்லோரும் ஓடிவந்து வண்டியை நிறுத்தி அந்தப் பையனை எழுப்பினார்கள். ஆனால் அவன் மயங்கி கிடந்தான். உடனே ஆஸ்பத்திரிக்கு செல்ல வேண்டும் .சார் ,உங்க வண்டியில் தானே மோதி அடிபட்டது. நீங்களே காரில் அவனை ஏற்றிக்கொண்டு ஆஸ்பத்திரியில் சேர்த்து விடுங்கள் என்று எல்லோரும் கேட்டனர் .காசி என் மீது தவறு இல்லை அவன் தான் வந்து மோதினான் என்றான். சார் நான் சிவராத்திரிக்கு சாமி தரிசனம் செய்ய திருவண்ணாமலைக்கு செல்கிறேன் என்னால் முடியாது என்றான். அவனுடைய மனைவி பாவங்க, ஒருத்தர் அடிபட்டு இருக்கும்போது அவருக்கு உதவுவது தானே நல்லது. சாமியை அப்புறம் பார்க்கலாம் என்றாள். அதற்குள் போலீசும் வந்து விட்டது. போலீஸ்காரர் வந்து சத்தம் போட்டு யார் மீது தப்பு என்று பின்னாடி பார்த்துக்கலாம். முதல்ல வண்டியின் பின்னால் அவரை ஏற்றி ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லுங்கள் என்றார். ஆஸ்பத்திரியில் கொண்டு சேர்த்தார்கள் .டாக்டர் மண்டையில் அடிபட்டு ரத்தம் நிறைய போயிருச்சு நாளைக்கு காலையில் தான் எதுவும் சொல்ல முடியும். உறவினர்களுக்கு தகவல் சொல்லி விடுங்கள் என்று கூறிவிட்டு அவர் உள்ளே சென்று விட்டார் .போலீஸ்காரர் காசி மற்றும் அவரது மனைவி இருவரையும் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக் கொண்டு சென்றுவிட்டார். சார் அந்த பையன் கண் திறக்கும் வரைக்கும் நீங்க எங்கும் செல்ல முடியாது இரவு முழுவதும் இங்கேயேதான் இருக்கணும். உங்கள் மனைவியை மட்டும் வீட்டுக்கு அனுப்பி விடுங்கள் என்றார். அவனும் வேறு வழி இல்லாமல் மனைவியை மட்டும் வீட்டிற்கு அனுப்பி விட்டான் .காசி மட்டும் விடிய விடிய முழித்துக் கொண்டு அங்கேயே உட்கார்ந்து கொண்டிருந்தான். சிவராத்திரிக்கு கோயிலுக்கு சென்று சிவனை தரிசனம் செய்யலாம் என்று நினைத்தவனுக்கு விதி இப்படி மாற்றியது. இருந்தாலும் அவன் மனது கோயிலுக்கு சென்றது . மனக்கண் முன்னே, சிவனுக்கு அபிஷேகம் செய்வது, பக்தர்கள் எல்லோரும் "அரோகரா" என்று பக்தியுடன் சொல்வது. போன்ற நிகழ்வுகள் அவன் கண்முன்னே தோன்றியது .அவன் இங்கிருந்தபடியே சாமியிடம் வேண்டிக் கொண்டான். அடிப்பட்ட பையனின் உயிரை காப்பாற்று அண்ணாமலையாரே என்று பிரார்த்தனை செய்தான். பெஞ்சில் உட்கார்ந்தபடியே தியானம் செய்து கொண்டே இருந்தான். பொழுது விடிந்ததும் போலீஸ்காரர் வந்து சார்.. என்று கூப்பிட்டார். அந்தப் பையன் கண்ண முழிச்சுட்டான். உயிருக்கு ஒன்றும் பயமில்லை சார். இப்பதான் ஹாஸ்பிடலில் இருந்து போன் வந்தது .நீங்க வீட்டுக்கு போகலாம் சார் என்றார். கண்ணைத் திறந்த காசியின் பார்வை மேஜையின் மேல் உள்ள கீ செயினில் இருந்த லிங்கம் கண்ணில் பட்டது. இரு கை கூப்பி அந்த லிங்கத்தை வணங்கினான். அண்ணாமலையாரே இந்த லிங்க வடிவில் அவனுக்கு காட்சி தந்தது போல் உணர்ந்தான்.

**எம்.எல்.பிரபா.**
ஆதம்பாக்கம்.

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*ஆசிரியரும் மாணவனும் பேசிக்கொண்டது;*
*நம்ம பள்ளியில் மொத்தம் 5 மாடிகள் இருக்கு.*
*ஒவ்வொரு மாடிக்கும் 15 படிக்கட்டுகள் இருக்கு.*
*ஐந்தாவது மாடிக்கு போகணும்னா எத்தனை படிக்கட்டுக்கள் ஏறணும் ?*




## தினம் ஒரு சமையல்



# முட்டை பணியார குழம்பு

**தேவையான பொருட்கள்:**

2 பெரிய வெங்காயம்
2 பெரிய வெங்காயம் மிக்ஸியில் அரைப்பதற்கு
2 தக்காளி
2 டீஸ்பூன் உப்பு
2 டீஸ்பூன் மிளகாய்த்தூள்
1 டீஸ்பூன் மஞ்சள் தூள்
1 டீஸ்பூன் தனியாத்தூள்
1 டீஸ்பூன் கரம் மசாலா
100 கிராம தேங்காய் பேஸ்ட்
சிறிதளவுகொத்தமல்லி
முட்டை பணியாரம் செய்வதற்கு
4 பெரிய வெங்காயம்
5 முட்டை
2 டீஸ்பூன் உப்பு
1 டீஸ்பூன் மிளகாய்த்தூள்
.5 டீஸ்பூன் மஞ்சள் தூள்
சமையல் குறிப்புகள்
30 நிமிடம்



**செய்முறை:**

ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து அதில் எண்ணெய் சேர்த்து அது சூடான பிறகு அதில் பட்டை கிராம்பு ஏலக்காய் சேர்த்து அதனுடன் பொடியாக நறுக்கி வெங்காயத்தை சேர்த்துக் கொள்ளவும். வெங்காயம் வதங்கிய பிறகு இப்போது மிக்ஸியில் வெங்காயத்தை சேர்த்து அரைத்து இப்போது அதனுடன் சேர்த்துக் கொள்ளவும்

வெங்காயம் நன்றாக வதங்கி பிறகு இப்போது அதில் பொடியாக அரிந்த தக்காளியை சேர்த்து வதக்கிக் கொள்ளவும்

அதனுடன் உப்பு மஞ்சள் தூள் மிளகாய் தூள் தனியா தூள் மற்றும் கரம் மசாலாவை சேர்த்து நன்றாக வத்கவும்

வதங்கிய பிறகு இப்போது தேங்காய் பேஸ்ட் சேர்த்து சிறிதளவு தண்ணீர் சேர்த்து கொதிக்க விடவும்

பொடியாக நறுக்கிய வெங்காயத்தை ஒரு பாத்திரத்தில் சேர்த்து அதனுடன் முட்டையை சேர்த்து பினநாதன் உப்பு மஞ்சள் தூள் மிளகாய் தூள் சேர்த்து நன்றாக கலந்து வைத்துக் கொள்ளவும்

பணியாரக் கல்லை அடுப்பில் வைத்து சூடான பிறகு அதில் எண்ணெய் சேர்த்து முட்டை கலவையை போட்டு ஒரு பக்கம் வெந்த பிறகு திருப்பி போட்டு மறுபக்கமும் வேக வைத்து எடுத்துக் கொள்ளவும்

பணியாரத்தை குழம்பில் போட்டு ஐந்து நிமிடம் கொதிக்க வைக்கவும் கடைசியில் கொத்தமல்லியை தூவி விடவும்

## மயிர்சிக்கி பயன்கள்



கிராமத்தில் ஒரு சொலவடை சொல்வார்கள், ஒரு முருங்கை மரமும், ஒரு கறவல் பசுவும் இருந்தால் போதும் ஒரு குடும்பம் பிழைத்துக்கொள்ளும் என்று கூறுவார்கள். ஏனென்றால், முருங்கை மரத்தில் இருந்து சாப்பிடுவதற்கு காய், கீரை கிடைக்கும், பசுவின் பால் மூலம் வருமானம் கிடைக்கும்.

இந்த முருங்கையில் எல்லா பாகங்களும் மருத்துவ குணம் கொண்டது. முருங்கைக் கீரை, முருங்கைக் காய் ஆரோக்கியமானது. முருங்கைக் கீரையைப் போல, காய்ந்த முருங்கைக் காயின் விதை மிகவும் ஆரோக்கியம் அளிக்கக் கூடியது என்று டாக்டர் கார்த்திகேயன் கூறுகிறார்.

முருங்கைக் காயை மரத்தில் இருந்து பறிக்காமல் விட்டுவிட்டால், அது நாளடைவில் காய்ந்து குச்சியாகிவிடும். அந்த காய்ந்த முருங்கைக் காயை உடைத்து அதில் இருக்கும் முருங்கை விதைகளை மேல் ஓடு நீக்கி அதில் உள்ள பருப்பை அப்படியே சாப்பிடலாம் அல்லது அந்த முருங்கை விதையை தண்ணீரில் ஊற வைத்து சாப்பிடலாம். முருங்கை விதையை வறுத்து சாப்பிடலாம் அல்லது முருங்கை விதையை வெந்நீரில் கொதிக்க வைத்து சாப்பிடலாம் அல்லது முருங்கை விதையைக் கொண்டு தேநீர் தயாரித்து சாப்பிடலாம். இந்த முருங்கை விதையில் நிறைய ஆரோக்கிய நன்மைகள், மருத்துவப் பலன்கள் இருப்பதாக டாக்டர் கார்த்திகேயன் கூறுகிறார்.

இந்த முருங்கை விதை நம்முடைய தோல்களுக்கு, முடிகளுக்கு போஷாக்குகளைத் தருகின்றன, இந்த முருங்கை விதையை ரத்தம் அழுத்தம் இருப்பவர்கள் சாப்பிடலாம். முருங்கை விதையை சாப்பிட்டால், ரத்த அழுத்தம் குறையும், ரத்தத்தில் கொழுப்பின் அளவு குறையும், நல்ல கொழுப்பு அளவு அதிகரிக்கும், கெட்ட கொழுப்பு அளவு குறையும் என்று டாக்டர் கார்த்திகேயன் கூறுகிறார்.

## சினிமா

# தனுஷ் உடன் திருமணமா? மிருனாள் தாகூர் கோபமாக கொடுத்த பதில்




தனுஷ் மற்றும் நடிகை மிருனாள் தாகூர் ஆகியோர் காதலித்து வருவதாக கடந்த வருடத்தில் இருந்தே கிசுகிசு பரவி வருகிறது. அது உண்மை இல்லை என நடிகை சொன்ன பிறகும் கிசுகிசு தொடர்ந்து வந்துகொண்டு தான் இருக்கிறது.

பிப்ரவரி 14ம் தேதி தனுஷ் மற்றும் மிருனாள் தாகூர் திருமணம் செய்ய போகிறார்கள் என புதிதாக ஒரு செய்தி சமீபத்தில் பரவியது.

இது பற்றி மிருனாள் தாகூரிடம் ஒரு பேட்டியில் கேட்கப்பட்டு இருக்கிறது. அதற்கு அவர் கோபமாக பதில் சொல்லி இருக்கிறார். "முதல் முறையாக பிப்ரவரி 14 என்பது ஏப்ரல் 1, APRIL FOOLS DAY ஆக மாறி இருக்கிறது. ஏனென்றால், இதை யார் பரப்ப தொடங்கினார்கள் என எனக்கு தெரியல."

"நான் பேசியதாக செய்தி போடுகிறார்கள். ஆனால் நான் எதுவுமே சொல்லவில்லை" என மிருனாள் தெரிவித்து இருக்கிறார்.



நடிகை யாஷிகா ஆனந்த் கவர்ச்சி போட்டோ வீடியோக்களுக்கு என்றே பெரிய ரசிகர் கூட்டமும் இருக்கிறது. தற்போது யாஷிகா உச்சகட்ட கவர்ச்சியில் போஸ் கொடுத்து சில புகைப்படங்களை வெளியிட்டு இருக்கிறார்.

# ராஷ்மிகா திருமண வீடியோ இத்தனை கோடியா? நயன்தாராவை விட பல மடங்கு கொடுக்கும்




நடிகை ராஷ்மிகா மற்றும் விஜய் தேவரகொண்டா ஆகியோரது திருமணம் விரைவில் நடைபெற இருக்கிறது. உதய்பூரில் இருக்கும் பிரமாண்ட அரண்மனையில் திருமணம் நடக்க இருப்பதாகவும், அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் தகவல் வெளியாகி இருக்கிறது.

திருமணத்தில் பாலிவுட் தொடங்கி கோலிவுட் வரை பல முக்கிய பிரபலங்கள் கலந்துகொள்ளவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் ராஷ்மிகா – விஜய் தேவரகொண்டாவின் திருமண வீடியோவின் உரிமையை 60 கோடி ரூபாய்க்கு வாங்க நெட்பிலிக்ஸ் நிறுவனம் முன்வந்து இருக்கிறதாம். ஆனால் அதை விற்பனை செய்ய விஜய் தேவரகொண்டா ஒப்புக்கொள்ளவில்லையாம். வாழ்க்கையின் முக்கிய தருணத்தை PRIVATE ஆகவே வைத்துக்கொள்ள விரும்புவதால் இந்த முடிவு என தெரிகிறது.

நடிகை நயன்தாரா திருமண வீடியோவுக்கு 25 கோடி ரூபாய் மட்டுமே கொடுத்தது நெட்பிலிக்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

பேப்பர்பாய்
சென்னை ஞாயிற்றுக்கிழமை 15.02.2026

# தைப்பூசத்தின் சிறப்புக்கள்

தை மாதம் பௌர்ணமியில் வரும் தைப்பூச சிறப்புகளை இன்று காண்போம்.

தைப்பூசம் என்றாலே தீமையை நன்மை வென்ற நாள்! இந்த நாளில் தொடங்குவதெல்லாம் துலங்கும். இந்த வருடம் தைப்பூசமானது பிப்ரவரி மாதம் 1ஆம் தேதி பௌர்ணமி நாளில் வருகிறது. தைப்பூசம் முருகப் பெருமான், சிவன், ஆகிய தெய்வங்களுக்கும் ராமலிங்க அடிகளார் அவர்களுக்கும் உகந்த நாள். தைப்பூசம் என்றவுடன் முதலில் நாம் ஞாபகத்தில் வருவது முருகப்பெருமானே!

### வேலவனை வேண்டுவதால் கிட்டும் நன்மைகள்


முருகப் பெருமானுக்கு உகந்ததாக கூறப்படும் நட்சத்திரங்கள் பங்குனி உத்திரம், ஆடி கிருத்திகை, வைகாசி விசாகம், தைப்பூசம், ஆகும். இந்த தைப்பூச திருநாளில் முருகனை நாம் வேண்டி விரதம் இருந்து வழிபட்டால் என்னென்ன கிட்டும் என்பதை பார்ப்போம். வாழ்வில் தலைவிதியையே மாற்றும் வடிவேலை வணங்கினால் வல்வினைகள் தீரும். போர் கடவுளாம் தேவ சேனாதிபதியை வணங்கினால் தீய சக்திகள் நம்மை அண்டாது. துன்பமே துவண்டு ஓடிவிடும். சண்முக நாதனை வணங்கினால் சகல சம்பத்தும் நம்மை வந்து அடையும். ஞானவேலை வழங்கினால் ஆழமான அறிவும் அகலமான மனமும் கூர்மையான புத்தியும் நம்மை வந்து அடையும். கந்தவேளை வணங்கினால் கடன் தொல்லை தீரும். மொத்தத்தில் குரு குகனை வணங்கினால் உங்கள் வாழ்க்கையை அவர் குருவாக பார்த்துக் கொள்வார்.

### தைப்பூச மகிமை

தைப்பூசத்தில் நிகழ்ந்ததாக கூறப்படும் நிகழ்வுகளை ஒன்றன்பின் ஒன்றாக பார்ப்போம் ஆறுமுகமாக உதித்த முருகப்பெருமானை பார்வதி அன்னை அள்ளி அணைத்தது இந்த நன்னாளில் தானாம். அவனுக்கு ஞானம் மற்றும் ஒளியின் அடையாளமான வடிவேலை கொடுத்து "வென்று வா" என்று அன்னை அனுப்பியதும் இந்த நன்னாளில் தானாம். வேல் பெற்ற முருகன் தீய சக்திகளை அழித்ததும் இந்த நன்னாளில் தானாம். வள்ளியை அவன் மணந்ததும் இந்த நாளில் தானாம். மொத்தத்தில் உலகம் தோன்றியதே இந்த நன்னாளில்தானாம். இத்தகைய நன்னாளில் அந்த ஞானப் பழத்தை வேண்டி விரதம் இருப்பது எத்தகைய சிறப்புடையது!

### தைப்பூச விரதம்

தைப்பூச விரதம் 48 நாட்கள் அல்லது 21 நாட்கள் அல்லது 11 நாட்கள் அல்லது ஒன்பது நாட்கள் அல்லது ஒரே ஒரு நாள் கூட விரதம் இருந்து அனுஷ்டிக்கலாம். தைப்பூசத்தன்று காலையில் எழுந்து நீராடி திருநீர் அணிந்து தூய மனதுடன் முருகனுக்கு மஞ்சள் அல்லது சிகப்பு மலர் சாத்தி வேலை பூஜை செய்வதென்றால் ஒரு வெள்ளி அல்லது பித்தளை கிண்ணத்தில் அரிசி நிரப்பி மலர்களை வைத்து அதில் வேலை சொருகி சட்கோண தீபம், வெற்றிலை தீபம் போன்ற தீபங்கள் ஏற்றி அவருக்கு பிடித்தமான தேன், தினை மாவு ,அல்லது பால் பாயாசம், சர்க்கரை பொங்கல் என நிவேதனம் செய்து வேண்டலாம். எதுவும் இயலா விடினும் ஒரு தீபம் ஏற்றி இரு கல்கண்டை வைத்து கூட நிவேதனம் செய்யலாம். நாம் பால்பழம் மட்டும் அருந்தி உபவாசம் இருக்கலாம். முடிந்தால் இரு வேளையும் கோவிலுக்கு சென்று வேண்டி வரலாம். இல்லத்திலேயே இருந்து கந்த சஷ்டி கவசம், திருப்புகழ், வேல்மாறல், போன்றவற்றை பாடலாம். இயலாதவர்கள் முருகா என்று ஒரு சொல்லால் அழைத்து உருகினாலே போதும். அவன் அருள் கிட்டும்.



### அருணகிரிநாதர் அருளுரை

கந்தர் அலங்காரத்தில் அருணகிரிநாதர் அவர்கள் முடியாத பிறவி கடலில் புகார் என்று தொடங்கும் 33வது பாடலில் முருகா என்று கூறினாலே என்னென்ன நன்மைகள் கிட்டும் என்று பட்டியலிட்டு இருக்கிறார். இத்தனை வழங்கும் முருகனை வணங்காதவர்கள் 'கோழி கொடியோன் அடிபணியாமல் குவளையத்தே வாழும் மதியிலிகாள்' என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

### தைப்பூச வரலாறு

தைப்பூசம் பற்றிய விபரங்கள் 1500 ஆண்டுகளுக்கு முன்பே தேவார திருப்பதிகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது பிற்கால சோழர்கள் காலத்தில் கோவில்களில் இந்நாளில் கூத்துக்கள் நடைபெற்றுள்ளது. திருவிடைமருதூரில் உள்ள மகாலிங்கேஸ்வரர் கோவிலில் தைப்பூசத்தை ஒட்டி நான்கு நாட்கள் கூத்து நடைபெற்றதாக கல்வெட்டுகள் கூறுகின்றன.

### தைப்பூசம் கொண்டாடப்படும் இடங்கள்

தைப்பூசம் தமிழர்கள் மட்டுமல்லாது கேரளத் தவரும் 'தைப்பூயம்' என்று கொண்டாடுகிறார்கள். எல்லா முருகன் திருத்தலங்களிலும் இந்த தைப்பூச திருநாள் கொண்டாடப்படுகிறது. பழனி மலையிலும் திருச்செந்தூரில் வெகு சிறப்பாக கொண்டாடப்படுகிறது. பக்தர்கள் பாத யாத்திரை செய்து சின்ன ரதம், சக்கரை காவடி, தீர்த்த காவடி, பறவை காவடி, பால் காவடி மீன் காவடி, மயில் காவடி, போன்ற காவடிகளை சுமந்து காவடி சிந்து பாடியும், பால்குடம் எடுத்தும், அலகு குத்தியும், வேண்டுதல்களை நிறைவேற்றி கோவிலில் தரிசனம் செய்கிறார்கள்.

தமிழகம் மட்டுமல்லாது தமிழர்கள் வாழும் உலகின் பல பாகங்களில் தைப்பூசம் கொண்டாடப்படுகிறது. இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, மொரிஷியஸ், தென்னாப்பிரிக்கா, ரியூனியன், ஆஸ்திரேலியாவின் விக்டோரியா, பிஜு ஆகிய இடங்களிலும் தற்பொழுது அமெரிக்காவில் உள்ள பல இந்து கோவில்களிலும் தைப்பூசம் சிறப்பாக அனுஷ்டிக்கப்படுகிறது. என்னப்பன் முருகனை வேண்டி எல்லாம் பெறுவோம்

### சிதம்பரம்

முருகனுக்கு மட்டுமல்லாது தைப்பூசம் சிவ ஸ்தலங்களிலும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. சிதம்பரத்தில் மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இந்த நன்னாளில்தான் சிவபெருமான் உமா தேவியாரோடு நடனமாடி உலகத்தவரை மகிழ்வித்ததாக கூறப்படுகிறது. மேலும் இரண்ய வர்மன் என்ற கௌடவ தேசத்து அரசனுக்கு (தற்போதைய மேற்கு வங்காளம்) இந்த நன்னாளில்தான் சிவபெருமான் நேரில் காட்சி அளித்ததாகக் கூறப்படுகிறது. அதனால் இந்த தைப்பூசம் சிதம்பரத்தில் மிகவும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. சிவ ஸ்தலங்களில் இந்த நன்னாளில் சிவனை வழிபட்டு அருள் பெறலாம். தேவ குருவான பிரகஸ்பதியின் ஜென்ம நட்சத்திரமும் இதுவே. எனவே குருவை இந்த நன்னாளில் வழிபாட்டால் பல நன்மைகள் கிட்டும். வள்ளலார் அவர்கள் இந்த தை மாத புனர்பூச நட்சத்திரத்தில் தான் ஒளி வடிவாக இறைவனை சென்றடைந்தார். எனவே அதற்கு அடுத்த நாளான தைப்பூசதன்று வடலூர் மேட்டுக்குப்பத்தில் ஜோதி தரிசன நிகழ்ச்சி நடைபெறுகிறது. வள்ளலார் அவர்களின் அருளைப் பெற இந்த நன்னாளில் தயிர் சாதம் நிவேதனம் செய்து அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை என்று ஜெபித்து அவரின் அருள் பெறுவோமாக.



வனஜா நாகராஜன்
யு.எஸ்.ஏ

# தினம் ஒரு தலைவர்கள்

# சரோஜினி நாயுடு வரலாறு

சரோஜினி நாயுடு அல்லது சரோஜினி சட்டோபத்யாயா (பிப்ரவரி 13,1879, ஐதராபாத் - மார்ச் 2,1949, லக்னோ) இவர் பாரத்திய கோகிலா (இந்தியாவின் நைட்டிங்கேல்) என்றும் அழைக்கப்படுகிறார். இவர் ஒரு பிரபலமான சிறுமுது அறிஞர், கவிஞர், எழுத்தாளர் , சுதந்திரப் போராளி மற்றும் சமூக ஆர்வலர் ஆவார். இந்திய தேசிய காங்கிரசின் இரண்டாவது பெண் தலைவரும்[ உத்தரப்பிரதேச மாநிலத்தின் முதல் பெண் ஆளுனரும் ஆவார். அவரது பிறந்த நாள் இந்தியாவில் மகளிர் தினமாக கொண்டாடப்படுகிறது.

இளமைக் காலம்

சரோஜினி சட்டோபாத்தியாயா, பின்னாளில் சரோஜினி நாயுடு, இந்தியாவின் ஹைதாராபாத் மாநிலத்தில் ஒரு வங்காள குலின் பிராமணக் குடும்பத்தில் மூத்த மகளாக 13 பிப்ரவரி 1879 அன்று பிறந்தார். இவர் இவரது குடும்பத்தின் 8 குழந்தைகளில் மூத்தவராவார். இவரது தந்தை விஞ்ஞானியும் தத்துவவியலாளரும் கல்வியாளராகவும் விளங்கிய அகோரநாத் சட்டோபத்யாயா. இவரது தாய் வரதா சுந்தரி ஒரு பெண் கவிஞர் ஆவார். இவரது தந்தை நிசாம் கல்லூரியின் நிறுவனர் ஆவார். மேலும் இவரது நண்பர் முல்லா அப்துல் காமுடன் இந்திய தேசிய காங்கிரசின் முதல் உறுப்பினராக விளங்கினார். அவர் பின்னர் அரசியலில் ஈடுபட்டதற்காக அவரது தலைமை ஆசிரியர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டார்.

### கல்வி

12 ஆவது வயதில் சரோஜினி நாயுடு அவரது மெட்ரிகுலேஷன் பரீட்சையில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தேர்ச்சி பெற்றார். அவர் மாநில அளவில் முதலிடம் பெற்றார். 1891 முதல் 1894 வரை அவர் தன்னுடைய படிப்பில் சிறு இடைவெளி விட்டு, பல்வேறு தலைப்பிலான புத்தகங்களைப் படித்தார். 1895 ஆம் ஆண்டு, பதினாறு வயதில் முதன் முதலாக நிஜாம் அறக்கட்டளையின் உதவித்தொகை லண்டனிலுள்ள கிங்ஸ் கல்லூரி மற்றும் கேம்பிரிட்ஜ் கிர்டன் கல்லூரியில் மூலம் படிப்பதற்காக சென்றார். உருது, தெலுங்கு, ஆங்கிலம், பாரசீகம், பெங்காலி ஆகிய மொழிகளைப் பேச சரோஜினி நாயுடு கற்றுக்கொண்டார். அவருக்கு பிடித்தமான கவிஞர் பெர்சி பைஷ் ஷெல்லி ஆவார்.


### திருமணம்

இங்கிலாந்தில் தங்கியிருந்த போது தனது 17 வயதில் முத்யாலா கோவிந்தராஜுலு நாயுடு என்ற ஒரு பிராமணர் அல்லாத தொழில்ரீதியான ஒரு மருத்துவரை சந்தித்து, அவரைக் காதலித்து தனது 19வது வயதில் திருமணம் செய்து கொண்டார். 1898 ஆம் ஆண்டு சட்டப்படி சென்னையில் அவர்கள் திருமணம் செய்து கொண்டனர். சாதியிடை திருமணங்கள் அனுமதிக்கப்படாத காலகட்டத்தில் அவரை திருமணம் செய்து கொண்டார். அதற்கு முற்போக்கு சிந்தனையுள்ள அவரது தந்தையின் ஒப்புதலும் கிடைத்தது. அவரது திருமண வாழ்க்கை மகிழ்ச்சிகரமானதாக இருந்தது. இவர்களது திருமணம் சென்னையில் டாக்டர் நஞ்சுண்டராவ்வின் 'சசி விலாஸ்' இல்லத்தில் நடைபெற்றது.அவர் சாதீயக் கட்டுப்பாடுகளின் தீவிர எதிர்ப்பு அலைகளைத் தாண்டி இத்திருமணத்தை நடத்தி வைத்தார். ஜெயசூர்யா, பத்மஜா, ரந்தீர், லீலாமணி என அவர்களுக்கு நான்கு குழந்தைகள் பிறந்தனர். பின்னர் அவரது மகள் பத்மஜா மேற்கு வங்காளத்தின் ஆளுனர் ஆனார்.

### அரசியல் வாழ்க்கை

மகாத்மா காந்தியுடன் சரோஜினி நாயுடு

இந்திய சுதந்திர போராட்டம் 1905 ஆம் ஆண்டில் வங்காளம் பிரிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் இந்திய சுதந்திர போராட்டத்தில் பங்கேற்றார். 1903-17 காலகட்டத்தில் சரோஜினி அவர்கள் கோபால கிருஷ்ண கோகலே, ரபீந்திரநாத் தாகூர், முகம்மது அலி ஜின்னா, அன்னி பெசண்ட், சி.பி.ராமஸ்வாமி ஐய்யர், மோகன்தாஸ் காந்தி, ஜவஹர்லால் நேரு ஆகியோரின் அறிமுகத்தைப் பெற்றார். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் மகாத்மா காந்தியுடன் இணைந்து தண்டி யாத்திரையில் ஈடுபட்டார். காந்தி, அப்பாஸ் தியாப்ஜி மற்றும் கஸ்தூரி பாய் காந்தி ஆகியோர் கைதுக்குப் பின் தர்சண சத்தியாகிரகத்தில் துடிப்புடன் பங்கேற்றார்.





1915 முதல் 1918 ஆண்டுகளுக்கிடையில் அவர் இந்தியா முழுவதும் இளைய சமுதாயத்தினரின் நல்வாழ்வு, பணியாளர் நலன், பெண் கொடுமை மற்றும் தேசியப் பற்று குறித்து பல்வேறு சொற்பொழிவுகளை மேற்கொண்டார். ஜவகர்லால் நேருவை 1916 ஆம் ஆண்டு சந்தித்ததற்குப் பின் அவர் சம்பரன் இன்டிகோ பணியாளர்கள் பிரச்சினையைக் கையில் எடுத்தார். 1925 ஆம் ஆண்டில் அவர் காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இப்பதவிக்கு தேந்தெடுக்கப்பட்ட முதல் பெண் இவரே ஆவார்.

1919 ஆம் ஆண்டு பிரித்தானிய அரசாங்கம் ரௌலெட் சட்டத்தினைப் பிறப்பித்தது. இதன் வழியாக விழிப்புணர்வு ஆவணங்களை வைத்திருப்பது சட்டத்திற்கு புறம்பானதாகக் கருதப்பட்டது; மோகன் தாஸ் காந்தி அவர்கள் எதிர்த்துப் போராட ஒத்துழையாமை இயக்கத்தைத் துவக்கினார், இதில் முதலில் இணைந்தவர் சரோஜினி நாயுடு ஆவார்.

ஜூலை 1919 ஆம் ஆண்டு சரோஜினி அவர்கள் இங்கிலாந்திற்கான ஹோம் ரூல் லீக்கின் தூதர் ஆனார். ஜூலை 1920 இல் அவர் இந்தியாவிற்கு திரும்பினார். ஆகஸ்ட் 1 அன்று மகாத்மா காந்தி அவர்கள் ஒத்துழையாமை இயக்கத்தைத் துவக்கினார். 1924 ஆம் ஆண்டு, கிழக்கு ஆப்பிரிக்க இந்திய காங்கிரசில் பங்கேற்ற இரண்டு இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர்களுள் ஒருவராக சரோஜினி அவர்கள் திகழ்ந்தார்.

அக்டோபர் 1928 ஆம் ஆண்டு நாயுடு நியூ யார்க்கிற்கு சென்றார். அங்கு நிலவிய ஆப்ரிக்க அமெரிக்க மற்றும் அமெரிக்க இந்திய இனப் பாகுபாடுகளைக் கண்டு கவலையுற்றார். அங்கிருந்து திரும்பிய பின்னர் காங்கிரஸ் காரிய கமிட்டியின் உறுப்பினரானார். ஜனவரி 26, 1930 இல் தேசிய காங்கிரஸ் பிரித்தானிய ஆட்சியிடமிருந்து சுதந்திரம் கோரியது. மே 5, அன்று மோகன் தாஸ் காந்தி கைது செய்யப்பட்டார். அதன் பின் சில நாட்களிலேயே நாயுடு அவர்களும் கைது செய்யப்பட்டு பல மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். காந்தி அவர்களுடன் ஜனவரி 31, 1931 இல் அவர் விடுதலை செய்யப்பட்டார். அந்த ஆண்டின் பிற்பகுதியில் அவர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டனர். மோசமான உடல் நிலை காரணமாக நாயுடு உடனடியாகவும் காந்தி 1933 ஆம் ஆண்டும் விடுதலை செய்யப்பட்டனர். 1931 ஆம் ஆண்டு அவர் காந்திஜி மற்றும் பண்டிட் மாலவியாஜி ஆகியோருடன் இணைந்து வட்ட மேசை மாநாட்டில் பங்கேற்றார். அக்டோபர் 2, 1942 ஆம் ஆண்டு அவர் வெள்ளையனே வெளியேறு போராட்டம் காரணமாக கைது செய்யப்பட்டார். அவர் காந்திஜியுடன் 21 மாதங்கள் சிறையில் இருந்தார். மோகன் தாஸ் காந்தி அவர்களுடன் நாயுடு அவர்கள் ஒரு பாசமான உறவினைக் கொண்டிருந்தார். காந்தி அவரை செல்லமாக "மிக்கி மவுஸ்" என்று அழைப்பார். 1947 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற ஆசிய உறவுகள் மாநாட்டில் நாயுடு பங்கேற்றார்.

### இந்தியாவின் முதல் பெண் ஆளுனர்

1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15 ஆம் நாள் இந்தியா சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு அவர் யுனைட்டட் ப்ரொவின்சஸ் (தற்போது உத்தரப்பிரதேசம் என்று அழைக்கப்படுகிறது) ன் ஆளுநராக பதவியேற்றார். இதன் வழியாக இந்தியாவின் முதல் பெண் ஆளுநரானார். மார்ச் 2, 1949 அன்று மாரடைப்பால் அவர் மரணமடைந்தார்.

கவிதைத் துறை

அவரது முக்கிய பங்களிப்பும் ஆர்வமும் கவிதை துறையில் இருந்தது. சரோஜினி நாயுடு கவிதைத் துறைக்காக பல பாராட்டுகளைப் பெற்றுள்ளார். இவரது கவிதைகளில் அழகான வார்த்தைகள் இருக்கும், மேலும் அது பாடக் கூடிய வகையிலும் இருக்கும். 1905 ஆம் ஆண்டு அவரது முதல் பாடல்கள் தொகுப்பு தி கோல்டன் த்ரெஷோல்டு என்னும் பெயரில் வெளியிடப்பட்டது . மேலும் இரண்டு பகுதிகள் வெளியிடப்பட்டது: தி பேர்ட் ஆஃப் டைம் (1912) மற்றும் தி புரோக்கன் விங் (1917). 1918 ஆம் ஆண்டு, பீஸ்ட் ஆப் யூத் வெளியிடப்பட்டது. பின்னர் அவரது தி விஸார்டு மாஸ்க் மற்றும் எ டிரஷரி ஆஃப் போயம்ஸ் ஆகிய புத்தகங்கள் வெளியிடப்பட்டன. 1961 ஆம் ஆண்டு அவரது மகள் பத்மஜா தனது தாயின் வெளியிடப்படாத கவிதைகளை தி ஃபெதர் ஆஃப் டான் என்னும் தலைப்பில் வெளியிட்டார்.

PRGI No. TNBIL/25/A1569
வைகறையில் பேப்பர்பாய்



# திருப்பதி லட்டு கலப்படத்தை மறைப்பது பாவச் செயல்: சந்திரபாபு நாயுடு

**திருமலை, பிப்.15:**

ஆந்திரத்தில் ஜெகன்மோகன் ரெட்டி தலைமையிலான ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் ஆட்சியில் (2019-2024), திருப்பதி ஏழுமலையான் கோயில் லட்டுகளை தயாரிக்கப் பயன்படுத்தப்பட்ட நெய்யில் விலங்கு கொழுப்பு கலக்கப்பட்டதாக, கடந்த 2024-ஆம் ஆண்டு மாநில முதல்வரும், தெலுங்கு தேசம் கட்சியின் தலைவருமான சந்திரபாபு நாயுடு குற்றஞ்சாட்டினார்.

இதுதொடர்பாக விசாரணை மேற்கொண்ட சிபிஐ தலைமையிலான சிறப்புப் புலனாய்வுக் குழு (எஸ்ஐடி) நெய்யில் விலங்கு கொழுப்பு கலக்கப்பட்ட குற்றச்சாட்டை மறுத்தது. மாறாக பால் அல்லது வெண்ணெய் என பால் சார்ந்த பொருள்களுக்குப் பதிலாக தரம் குறைந்த நெய், பாமாயில் உள்ளிட்ட கலப்பட பொருள்கள் மூலம் திருப்பதி லட்டுகள் தயாரிக்கப்பட்டதாக எஸ்ஐடி அண்மையில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. இதையடுத்து, தங்கள் மீது போலியான குற்றச்சாட்டுகளை சுமத்திய சந்திரபாபு நாயுடு மன்னிப்புக் கோர வேண்டும் என ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் வலியுறுத்தியது.

இந்நிலையில், சந்திரபாபு நாயுடு, 'திருப்பதி லட்டு கலப்பட விவகாரத்தை பொதுமக்களிடமிருந்து மறைப்பது பெரும் பாவச் செயலாகும். அது பொதுமக்களின் நம்பிக்கைக்கு இழைக்கும் துரோகம்.

எதிர்காலத்தில் இந்த விவகாரத்தில் ஏதேனும் பிரச்னைகள் ஏற்பட்டிருந்தால் அதற்கு மாநில அரசே பொறுப்பேற்றிருக்க வேண்டியிருக்கும். யாருடைய உணர்வுகளையும் பாதிக்கச் செய்வது அரசின் நோக்கமல்ல. ஒவ்வொரு கோயிலின் புனிதத்தன்மையையும் பாதுகாப்பது தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் பொறுப்பு என பொதுமக்களுக்கு உறுதியளிக்கிறேன்' என்றார்.

# சபரிமலை தங்கக் கவச முறைகேடு: 2ஆவது நாளாக மாதிரிகள் சேகரிப்பு



**சபரிமலை, பிப்.15:**

சபரிமலை ஐயப்பன் கோயில் தங்கக் கவசங்களில் இருந்து மாதிரிகள் சேகரிக்கும் பணியில் சிறப்புப் புலனாய்வுக் குழுவினர் (எஸ்ஐடி) வெள்ளிக்கிழமை இரண்டாவது நாளாக ஈடுபட்டனர்.

தங்கக் கவச முறைகேடு வழக்கு விசாரணையின்கீழ், மேம்பட்ட அறிவியல்பூர்வ பகுப்பாய்வுக்காக இந்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

சபரிமலை கோயிலில் துவார பாலகர்கள், கருவறைக் கதவுகளின் தங்கக் கவசங்கள் கடந்த 2019-இல் புதுப்பிக்கப்பட்ட பிறகு அவற்றின் எடை குறைந்ததாகப் புகார் எழுந்தது. இது தொடர்பாக இரு வழக்குகளைப் பதிவு செய்து, கேரள காவல் துறையின் எஸ்ஐடி விசாரணை மேற்கொண்டு வருகிறது. தங்கக் கவச புதுப்பிப்புப் பணிக்கான செலவை ஏற்ற பெங்களூரு தொழிலதிபர் உண்ணிகிருஷ்ணன் போற்றி, திருவிதாங்கூர் தேவஸ்வம் வாரிய முன்னாள் தலைவர்கள் என்.வாசு, ஏ.பத்மகுமார், தேவஸ்வம் வாரிய முன்னாள் நிர்வாக அதிகாரிகள் பி.முராரி பாபு, எஸ்.ஸ்ரீகுமார் உள்பட 12 பேர் அடுத்தடுத்து கைதாகினர். இதில், உண்ணிகிருஷ்ணன் போற்றி உள்பட 5 பேர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர்.

இதனிடையே, மேம்பட்ட அறிவியல்பூர்வ ஆய்வுகளுக்காக சபரிமலை ஐயப்பன் கோயில் தங்கக் கவசங்களில் மீண்டும் மாதிரிகளை சேகரிக்க கேரள உயர்நீதிமன்றத்திடம் எஸ்ஐடி அனுமதி பெற்றது. மாதாந்திர பூஜைகளுக்காக சபரிமலை கோயில் நடை வியாழக்கிழமை மாலை திறக்கப்பட்ட நிலையில், காவல் துறைக் கண்காணிப்பாளர் எஸ்.சசிதரன் தலைமையிலான சிறப்புப் புலனாய்வுக் குழு சபரிமலையில் மாதிரி சேகரிப்பைத் தொடங்கியது. இதற்காக தங்கக் கவசங்கள் கழற்றப்பட்டன. இரண்டாவது நாளாக வெள்ளிக்கிழமையும் இந்தப் பணிகள் தொடர்ந்தன. பிப்.17 வரை ஐயப்பன் கோயில் நடை திறந்திருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருப்பதி கோவிலில் ஒருநாள் உண்டியல் காணிக்கை ரூ.3.28 கோடி

**புதுடெல்லி, பிப்.15:**

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் தினமும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர். இலவச தரிசனத்தில் பக்தர்கள் பல மணி நேரம் காத்திருந்து தரிசனம் செய்கின்றனர். இந்த நிலையில், திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நேற்று முன்தினம் 61 ஆயிரத்து 632 பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். 24 ஆயிரத்து 435 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர். அன்று அறிவிக்கப்பட்ட ஒருநாள் உண்டியல் காணிக்கை ரூ.3 கோடியே 28 லட்சம்.

# நீட் தேர்வுக்கு பயிற்சி பெற்று வந்த மாணவி விஷம் குடித்து தற்கொலை

**ஜெய்ப்பூர், பிப்.15:**

ராஜஸ்தான் மாநிலம் கோட்டா மாவட்டத்தில் நீட் உள்பட பல்வேறு போட்டித்தேர்வுகள், நுழைவுத்தேர்வுகளுக்கு பயிற்சி வகுப்புகள் செயல்பட்டு வருகின்றன. நாட்டின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த மாணவ, மாணவியர் இங்கு வந்து தங்கி பயிற்சி செய்து வருகின்றனர். ஆனால், தேர்வு அழுத்தம் காரணமாக பல மாணவ, மாணவியர் தற்கொலை எனும் தவறான முடிவை எடுக்கும் சம்பவங்களும் அரங்கேறி வருகின்றன.

இதனிடையே, மத்தியபிரதேச மாநிலம் சட்டர்பூர் மாவட்டத்தை சேர்ந்த மாணவி ஜுகி பட்டேல் (வயது 18). இவர் ராஜஸ்தான் மாநிலம் கோட்டாவில் உள்ள பெசண்ட் விஹார் பகுதியில் தங்கி அங்குள்ள நீட் பயிற்சி மையத்தில் இளநிலை நீட் தேர்வுக்கு பயிற்சி பெற்று வந்தார். இந்நிலையில், மாணவி ஜுகி பட்டேல் நேற்று இரவு விடுதியில் வைத்து விஷம் குடித்துள்ளார். இது குறித்து அறிந்த சக மாணவிகள் அவரை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். மருத்துவமனையில் ஜுகி பட்டேலுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார், நீட் தேர்வுக்கு பயிற்சி பெற்று வந்த மாணவி விஷம் குடித்து தற்கொலை செய்துகொண்டதற்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# டில்லியில் 51 ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர்கள் திறப்பு




**புதுடெல்லி, பிப்.15:**

டில்லியில் தொடக்க நிலை மருத்துவசேவைகளை விரிவுபடுத்தும் விதமாக ஃபதேபூர் பெரி பகுதியில் ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திரை முதல்வர் ரேகா வெள்ளிக்கிழமை திறந்துவைத்தார்.

தில்லியில் கடந்த ஆண்டு நடைபெற்ற பேரவை தேர்தலில் வெற்றி பெற்று 27 ஆண்டுகளுக்குப் பிறகு பாஜக மீண்டும் ஆட்சிக்கு வந்தது. இதைத்தொடர்ந்து, முதல்வர் ரேகா குப்தா தலைமையிலான அரசு தேர்தல் வாக்குறுதிகளில் அறிவித்தபடி ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர்களை திறந்து வைத்துள்ளது.

இந்நிலையில், தில்லியின் பல்வேறு பகுதிகளில் புதிதாக 51 ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர்கள் திறந்துவைக்கப்பட்டன. ஃபதேபூர்பெரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற முதல்வர் ரேகா குப்தா பேசுகையில், 'மருத்துவ சேவைகளைப் பெறுவதில் ஏழைகள் எதிர்கொண்டு பிரச்னைகளை கருத்தில் கொண்டு இந்த மருத்துவ மையங்கள் திறக்கப்படுகிறது' என்றார். மதிபூரில் நடைபெற்ற ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர் திறப்பு நிகழ்ச்சியில் தில்லி சுகாதாரத் துறை அமைச்சர் பங்கஜ் குமார் பங்கேற்றார்.

# ஜார்க்கண்ட்: காட்டு யானைக் கூட்டம் தாக்கியதில் வீட்டில் தூங்கிக்கொண்டிருந்த 6 பேர் பலி



**புதுடெல்லி, பிப்.15:**

ஜார்க்கண்ட் மாநிலம், ஹசாரிபாக் மாவட்டத்தில் உள்ள கோண்ட்வார் கிராமத்தில் வியாழக்கிழமை இரவு காட்டு யானைக் கூட்டம் தாக்கியதில் 6 பேர் பலியாகினர். பலியானவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் அடங்குவர்.

பலியானவர்கள் சூரஜ் பூயன் (55), அவரது மருமகள் சுமன் தேவி (25), சுமனின் இரண்டு மைனர் குழந்தைகள், மங்க்ரா பூயன் (58), மற்றும் தனேஷ்வர் ராம் (சுமார் 55) என அடையாளம் காணப்பட்டுள்ளனர். சூரஜ் பூயனும் அவரது குடும்பத்தினரும் தங்கள் வீட்டிற்குள் தூங்கிக் கொண்டிருந்தனர். கட்டடம் தாக்கப்பட்ட போது அவர்களால் தப்பிக்க முடியவில்லை. சத்தம் கேட்டு, கிராமவாசிகள் ஓடிவந்து, டிரம் அடித்து, பாத்திரங்களை அடித்து, டார்ச்ச்களை மின்னும் வகையில் விலங்குகளை விரட்ட முயன்றனர். பிறகு யானைகள் அருகிலுள்ள காட்டுப் பகுதிக்குள் புகுந்தது. சம்பவம் குறித்து தகவல் கிடைத்த உடனேயே, மாவட்ட நிர்வாகம், காவல் துறை மற்றும் வனத் துறையைச் சேர்ந்த குழுக்கள் விரைந்தன. உடல்கள் கூராய்வுக்கு அனுப்பப்பட்டு, சொத்து சேதம் குறித்த மதிப்பீடு தொடங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் மற்றும் இழப்பீடு வழங்கும் பணியை அதிகாரிகள் தொடங்கியுள்ளனர்.

மேலும் இரவு நேரங்களில் குடியிருப்பாளர்கள் விழிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தியுள்ளனர். கிராமவாசிகளின் கூற்றுப்படி, ஐந்து யானைகள் கொண்ட கூட்டம் அதிகாலை 1 மணி முதல் அதிகாலை 2 மணி வரை கிராமத்திற்குள் நுழைந்தது.

அப்போது பெரும்பாலான குடியிருப்பாளர்கள் தூங்கிக் கொண்டிருந்தனர். யானைகள் பல மண் வீடுகளை சேதப்படுத்தியதாகவும், குடியிருப்பு வழியாகச் செல்லும்போது சுவர்கள் மற்றும் கதவுகளை உடைத்ததாகவும் தெரிவித்தனர்.

# ஏ.டி.எம்.மில் நிரப்ப வந்த ரூ.60 லட்சத்துடன் வேன் டிரைவர் ஓட்டம்

**நகரி, பிப்.15:**

ஐதராபாத் அருகே திருமலகிரியில் உள்ள நிதி நிறுவனம் ஒன்றில் அஜித் குமார் என்பவர் டிரைவராக பணியாற்றி வந்தார். அவர் ஏ.டி.எம்.களில் பணம் நிரப்ப செல்லும் வாகனத்தை இயக்கி வந்தார். நேற்று முன்தினம் மதியம் அவர், வழக்கம்போல தனது அலுவலக குழுவினருடன் வங்கி ஏ.டி.எம்.மில் பணம் நிரப்புவதற்காக சென்று கொண்டிருந்தார். சில தனியார் வங்கி ஏ.டி.எம்.களில் அவர்கள் பணத்தை நிரப்பினர். மாலை 4.30 மணிக்கு கோபனபள்ளி பகுதிக்கு வந்தனர். பாதுகாவலர்கள் கொஞ்சம் பணத்துடன் ஒரு ஏ.டி.எம். எந்திரத்தை நிரப்பச் சென்றனர். ஒரு பாதுகாவலர் வேன் அருகே இருந்தார். அவர் சிறுநீர் கழித்து வருவதாக அருகில் சென்ற நேரத்தில், டிரைவர் அஜித் பணத்துடன் வேனை எடுத்துக் கொண்டு தப்பி ஓடிவிட்டார். வேனில் ரூ.60 லட்சம் பணம் இருந்ததாக தெரியவந்தது. இதுகுறித்து போலீசில் புகார் செய்யப்பட்டது. போலீசார் வழக்குப்பதிவு செய்து, ஓரிடத்தில் கேட்பாரற்று நின்ற வேனை பறிமுதல் செய்தனர். தலைமறைவான அஜித் குமாரை வலைவீசி தேடி வருகின்றனர்.

# 25 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதிக்கு மத்திய அரசு அனுமதி



**புதுடெல்லி, பிப்.15:**

நாட்டில் கோதுமை உள்ளிட்ட பொருள்களின் இருப்பு அளவு, விலை நிலவரம், ஏற்றுமதியை அனுமதிப்பதால் விவசாயிகளுக்கு கிடைக்கும் நன்மைகளைக் கருத்தில்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய உணவுப் பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தனியார் நிறுவனங்களிடம் இப்போது 75 லட்சம் டன் அளவுக்கு கோதுமை கையிருப்பு உள்ளது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது 32 லட்சம் டன் அதிகமாகும். இதனால், நாட்டில் கோதுமை விநியோகத்தில் எவ்வித பிரச்னையும் வராது என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

2026 ஏப்ரல் 1-ஆம் தேதி மத்திய அரசின் இந்திய உணவுக் கழகத்தில் 182 லட்சம் டன் அளவுக்கு கோதுமை கையிருப்பு உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இப்போது வழங்கப்பட்டுள்ள ஏற்றுமதி அனுமதி உள்நாட்டு உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதில் எவ்விதத் தாக்கத்தையும் ஏற்படுத்தாது. 2026 ரபி பருவத்தில் கோதுமை சாகுபடி பரப்பளவு 334.17 லட்சம் ஹெக்டேராக விரிவடைந்துள்ளது. கடந்த ஆண்டு 328.04 லட்சம் ஹெக்டேர் அளவுக்கே சாகுபடி செய்யப்பட்டது. குறைந்தபட்ச ஆதரவு விலை உறுதியாகக் கிடைப்பது, சிறப்பான கொள்முதல் நடவடிக்கை ஆகியவற்றின் காரணமாக விவசாயிகள் அதிக அளவில் கோதுமை சாகுபடி செய்துள்ளனர். இதன்மூலம் நாட்டில் கோதுமை உற்பத்தி மேலும் உத்வேகம் பெறும். சர்க்கரையைப் பொறுத்தவரை, 2025-26 பருவத்துக்கான கரும்பு ஆலைகளின் கோரிக்கையை ஏற்று 5 லட்சம் டன் ஏற்றுமதிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்பு கடந்த 2025 நவம்பரில் 15 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதிக்கு அனுமதி அளிக்கப்பட்டது என்றும் மத்திய உணவுப் பாதுகாப்புத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# டில்லி மாநகராட்சியில் 2026-27-ஆம் ஆண்டுக்கான ரூ.17,500 கோடிக்கான பட்ஜெட் தாக்கல்

**புதுடெல்லி பிப்.15:**

தில்லி மாநகராட்சி 2026-27-ஆம் ஆண்டுக்கான ரூ.17,583 கோடி பட்ஜெட்டை வெள்ளிக்கிழமை தாக்கல் செய்தது. இதில் சுகாதாரத் துறைக்கு அதிகப்படியாக ரூ.4,797.78 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

கிராமப்புறங்களில் சொத்து வரி நிவாரணம், தினசரி ஊதிய ஊழியர்களை முறைப்படுத்துதல் மற்றும் விரிவாக்கப்பட்ட சுகாதார வசதிகள் போன்ற புதிய முயற்சிகளை எடுத்துரைக்கும் முக்கிய திட்டங்கள் பட்ஜெட்டில் இடம்பெற்றிருந்தன.

பட்ஜெட் தாக்கலின் போது அவைத் தலைவர் பிரவேஷ் வாஹி ஆற்றிய உரை வருமாறு: தில்லியின் பொது நிர்வாகத்திற்கு ரூ.3,548.63 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கல்வித் துறைக்கு ரூ.3,264.84 கோடியும், பொறியியல் துறைக்கு ரூ.1,884.43 கோடியும், தோட்டக்கலைத் துறைக்கு ரூ.414.16 கோடியும், கால்நடைத் துறைக்கு ரூ.137 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

2026-27-ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட வருமானம் ரூ.17,184 கோடியாகவும், செலவினம் ரூ.17,583 கோடியாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சொத்து வரி விலக்கு: கிராமப்புற குடியிருப்பாளர்களுக்கு பயனளிக்கும் வகையில், 49 முழு கிராமங்களில் 500 சதுர மீட்டருக்கும் குறைவான பரப்பளவு கொண்ட மூதாதையர் வீடுகளின் உரிமையாளர்களுக்கு முழு சொத்து வரி விலக்கு அளிக்கப்படும். 200 சதுர மீட்டர் வரை வீடுகளைக் கொண்ட நகரமயமாக்கப்பட்ட கிராமங்களில் வசிக்கும் பூர்வீக குடியிருப்பாளர்களுக்கும் இந்த சொத்து வரி விலக்கு வழங்கப்படும்.

நகராட்சி ஊழியர்களின் கவலைகளை நிவர்த்தி செய்யும் வகையில், மாநகராட்சியின் எம்டிஎஸ் பிரிவு ஊழியர்களுக்கு சமமான ஊதியம் வழங்கப்படும். பொறியியல், சுகாதாரம், ஆயுஷ் மற்றும் பிற துறைகளில் 2006 முதல் 2012-ஆம் ஆண்டு வரை பணியாற்றிய 375 கடைநிலை ஊழியர்கள் நிரந்தர ஊழியர்களாக மாற்றப்படுவார்கள்.

சுகாதாரத் துறைக்கு அதிகப்படியாக ரூ.4,797.78 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# பிப். 17- இல் நெருப்பு வளைய சூரிய கிரகணம்

**புதுடெல்லி, பிப்.15:**

நிகழாண்டுக்கான முதல் சூரிய கிரகணம் பிப். 17-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை நிகழவுள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் 3.26 மணி அளவில் சூரிய கிரகணம் தொடங்குகிறது. தொடர்ந்து இரவு 7.57 மணிக்கு முடிவடைகிறது. இந்த நெருப்பு வளைய சூரிய கிரகணம் இந்தியாவில் தெரியாது. அண்டார்டிகாவின் தொலைதூரப் பகுதிகள் மற்றும் தென்னாப்பிரிக்கா மற்றும் தென் அமெரிக்காவின் சில பகுதிகளிலிருந்து மட்டுமே காணமுடியும். அண்டார்டிகா கண்டத்தில் கான்கார்டியா மற்றும் மிர்னி போன்ற இடங்களிலும், தென்னாப்பிரிக்கா, தான்சானியா, சாம்பியா மற்றும் ஜிம்பாப்வே போன்ற நாடுகளில் பகுதியளவும், தென் அமெரிக்காவின் அர்ஜென்டினா மற்றும் சிலியின் சில பகுதிகளில் மட்டுமே இந்த சூரிய கிரகணத்தை தெளிவாக காண முடியும். எனினும் நாஸா தளம், யூ-டியூப் சேனல் மற்றும் இணையதளங்களில் இந்த நிகழ்வை காணலாம்.

சூரிய கிரகணத்தை நாம் வெற்றுக் கண்ணால் காணக்கூடாது. சூரிய ஒளியை ஊடுருவக்கூடிய கண்ணாடிகளை நாம் பயன்படுத்தி பார்க்கலாம். சூரிய கிரகணம் பார்ப்பவர்களாக இருந்தால் குறைவான நொடிகள் மட்டுமே பார்க்க வேண்டும். இல்லாவிட்டால் கண்களில் பாதிப்பு உண்டாகலாம்.

மேலும் கிரகணத்தின்போது நிகழும்போது வெளியில் செல்லும்போது தவிர்க்க வேண்டும். இந்த ஆண்டின் மற்றொரு சூரிய கிரகணம் ஆக. 12-ஆம் தேதி நிகழவுள்ளது. இது ஒரு முழு சூரிய கிரகணம் ஆகும். இது ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவின் சில பகுதிகளில் தெரியும் என அறிவியல் பலகை அமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் பா.ஸ்ரீகுமார் தெரிவித்தார்.

# போக்குவரத்து விதிமீறல்கள்: பிகாரில் 10 மாதங்களில் ரூ.300 கோடி அபராதம் விதிப்பு

**பாட்னா, பிப்.15:**

பிகாரில் கடந்த 10 மாதங்களில் போக்குவரத்து விதிகளை மீறியதற்காக ரூ.301.28 கோடி அபராதங்கள் விதிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் ஷர்வான் குமார் வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், கடந்த 10 மாதங்களில் தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து விதிகளை மீறியதற்காக 301.28 கோடி ரூபாய் மதிப்பிலான 4.97 லட்சம் சலான்கள் வழங்கப்பட்டுள்ளன.

டிசம்பர் முதல் பிப்ரவரி வரையிலான கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் 90.97 கோடி ரூபாய் மதிப்பிலான 1.48 லட்சம் சலான்கள் வழங்கப்பட்டுள்ளன. மொத்த தொகையான 301.28 கோடி ரூபாயில் இதுவரை 115.23 கோடி ரூபாயை துறை வசூலித்துள்ளது.

இந்த சலான்கள் ஏப்ரல் 1, 2025 முதல் பிப்ரவரி 11, 2026 வரை வழங்கப்பட்டவை. மீதமுள்ள தொகையை வசூலிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாநிலம் முழுவதும் நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து விதிமீறல்களுக்கு எதிரான நடவடிக்கைகளை போக்குவரத்துத் துறை தீவிரப்படுத்தியுள்ளது.

இதன் நோக்கம் விபத்துகளைக் குறைப்பதே என்று கூறினார். இதனிடையே போக்குவரத்துத் துறை வெளியிட்ட தரவுகளின்படி, கடந்த இரண்டு மாதங்களில் போக்குவரத்து விதிமீறல்களில் கைமூர் மாவட்டத்தில் உள்ள பபுவா முதலிடத்தில் உள்ளது.

அங்கு 12.16 கோடி ரூபாய் மதிப்பிலான 30,833 சலான்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து கோபால்கஞ்ச்சில் 8.34 கோடி ரூபாய் மதிப்பிலான 23,308 சலான்களும், கயாவில் 7.88 கோடி ரூபாய் மதிப்பிலான 16,038 சலான்களும் வழங்கப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# பட்ஜெட் கூட்டத் தொடரின் முதல்கட்ட அமர்வு அமளியுடன் நிறைவு : மீண்டும் மார்ச் 9-இல் கூடும்

**புதுடெல்லி, பிப்.15:**

நடப்பு நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் முதல்கட்ட அமர்வு வெள்ளிக்கிழமை அமளியுடன் நிறைவடைந்தது. இரு அவைகளும் மீண்டும் மார்ச் 9-ஆம் தேதி கூடும்.

பல்வேறு மத்திய அமைச்சகங்களுக்கான பட்ஜெட் ஒதுக்கீட்டை நிலைக்குழுக்கள் ஆராய்வதற்காக இந்த இடைவெளி விடப்பட்டுள்ளது.

கடந்த ஜன.28-இல் குடியரசுத் தலைவர் உரையுடன் தொடங்கிய பட்ஜெட் கூட்டத் தொடரில், 2026-27-ஆம் நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட் கடந்த பிப்.1-இல் தாக்கல் செய்யப்பட்டது. இந்தக் கூட்டத் தொடரின் முதல்கட்ட அமர்வு வெள்ளிக்கிழமை நிறைவடைந்தது. இரண்டாம் கட்ட அமர்வு, மார்ச் 9-இல் தொடங்கி ஏப். 2 வரை நடைபெறும். அத்துடன் பட்ஜெட் கூட்டத் தொடர் நிறைவு பெறும். மார்ச் 9-ஆம் தேதி தொடங்கும் இரண்டாம் கட்ட அமர்வில் அவைத் தலைவருக்கு எதிரான தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.




## ரயில்வே பெண் ஊழியருக்கு பாலியல் தொந்தரவு: கேரள இளைஞருக்கு 5 ஆண்டு சிறை

**தென்காசி, பிப்.15:** ரயில்வே ஊழியருக்கு பாலியல் தொந்தரவு அளித்த கேரள இளைஞருக்கு 5 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து தென்காசி மகளிர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

தென்காசி மாவட்டம் பாவூர்சத்திரத்தில் ரயில்வே கேட் கீப்பராகப் பணியாற்றிய பெண் ஊழியர் கடந்த 2023 பிப். 16-ம் தேதி இரவு பணியில் இருந்தார்.

அப்போது, அவரது அறைக்குள் அத்துமீறி புகுந்த இளைஞர் ஒருவர், ரயில்வே பெண் ஊழியரைத் தாக்கி, பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளார்.

அதிர்ச்சியடைந்த அந்தப் பெண் ஊழியர் கூச்சலிட்டதால், அந்த இளைஞர் அங்கிருந்து தப்பிச் சென்றார். ரயில்வே பெண் ஊழியர் பாலியல் தொந்தரவுக்கு உள்ளான சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

இது தொடர்பான புகாரின் பேரில் தென்காசி ரயில்வே போலீஸார் விசாரணை நடத்தினர். விசாரணையில், பாவூர் சத்திரம் பகுதியில் வேலை செய்து வந்த, கேரள மாநிலம் கொல்லம் மாவட்டம், வாழவிழா பகுதியைச் சேர்ந்த அனீஷ் (27) என்பவர், ரயில்வே ஊழியருக்கு பாலியல் தொந்தரவு கொடுத்தது தெரியவந்தது.

இதையடுத்து, அவரைப் போலீஸார் கைது செய்தனர். இந்த வழக்கு தென்காசி மகளிர் நீதிமன்றத்தில் நடைபெற்றது. வழக்கை விசாரித்த நீதிபதி (பொறுப்பு) பி.ராஜவேலு, குற்றம் சுமத்தப்பட்ட அனீஷுக்கு 5 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும், ரூ. 2,000 அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார். இந்த வழக்கில் அரசுத் தரப்பில் வழக்கறிஞர் கவிதா ஆஜராகினார்.

## புதுக்கோட்டை: பஜ்ரங்தள் அமைப்பின் முன்னாள் நிர்வாகி கொலை

**புதுக்கோட்டை, பிப்.15:** பஜ்ரங்தள் அமைப்பின் முன்னாள் நிர்வாகி புதுக்கோட்டையில் நேற்று கொலை செய்யப்பட்டார். புதுக்கோட்டை திருக்கோகர்ணம் குட்ஷெட் சாலை பகுதியைச் சேர்ந்தவர் மோகன்ராஜ் (38).

பஜ்ரங் தள் அமைப்பின் முன்னாள் கோட்டப் பொறுப்பாளர். இந்நிலையில், மோகன்ராஜ், தாயார் சுசீலா, மனைவி சூர்ய பிரியா ஆகியோர் நேற்று வீட்டில் இருந்தனர். அப்போது, வீட்டுக்கு வந்த ஒருவர் சுசீலாவிடம் மோகன்ராஜின் நண்பர் என்றும், கோவையில் இருந்து வந்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

பின்னர், வீட்டின் வாயிலில் அந்த நபருடன் மோகன்ராஜ் சிறிது நேரம் பேசிக்கொண்டு இருந்தார். திடீரென தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் மோகன்ராஜின் கழுத்தை அறுத்துக் கொலை செய்துவிட்டு, அந்த நபர் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார். இதனால் அவரது குடும்பத்தினர் மற்றும் அக்கம்பக்கத்தினர் அதிர்ச்சியடைந்தனர்.

தகவலறிந்து வந்த திருக்கோகர்ணம் போலீஸார், மோகன்ராஜின் உடலை மீட்டு, பிரேதப் பரிசோதனைக்காக அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும், கொலை தொடர்பாக வழக்குப் பதிவு செய்து, கொலை செய்தவர் யார், அவருடன் வேறு யாரும் வந்தார்களா, கொலைக்கான காரணம் என்ன என்பது குறித்து விசாரித்து வருகின்றனர்.

இதற்கிடையே, கொலையாளியைக் கண்டுபிடித்து, கைது செய்ய வேண்டும் என வலியுறுத்தி மோகன்ராஜின் உறவினர்கள், திருக்கோகர்ணம் காவல் நிலையத்தை முற்றுகையிட்டனர். மேலும், அப்பகுதியில் சாலை மறியலிலும் ஈடுபட்டனர். உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று போலீஸார் உறுதி அளித்ததையடுத்து, போராட்டத்தைக் கைவிட்டனர்.

## செல்போன் பறிப்பு உள்ளிட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்டு வந்த மூவர் சென்னையில் கைது!

**மாதவரம், பிப்.15:** சென்னையை அடுத்த மாதவரம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் இருசக்கர வாகனத்தில் நடந்து செல்வோரின் செல்போன்களை பறிப்பது உள்ளிட்ட தொடர் குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்த மூன்று பேரை போலீசார் கைது செய்தனர்.

திருட்டுக்குப் பயன்படுத்திய இருசக்கர வாகனம், விலை உயர்ந்த 5 செல்போன்களையும் பறிமுதல் செய்தனர்.

சென்னை மாதவரம், புழல் சுற்றியுள்ள பகுதிகளில் இருசக்கர வாகனத்தில் செல்லும் மர்ம நபர்கள் செல்போன்களை பறித்து செல்வதாக வந்த புகார்களின் அடிப்படையில் புழல் சரக உதவி ஆணையாளர் சிபுக்குமார், சம்பவத்தில் ஈடுபடும் குற்றவாளிகளை விரைந்து பிடிக்க உத்தரவிட்டார்.

மாதவரம் குற்றப்பிரிவு ஆய்வாளர் கோபிநாத் இதுகுறித்து வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணை செய்து தனிப்படை குழுவாக அமைத்தார். பிறகு சம்பவம் நடந்த இடத்தின் அருகில் உள்ள சிசிடிவி கேமராக்களின் பதிவுகளை வைத்து குற்றவாளிகளை ஆராய்ந்து தேடி வந்தனர்.

இந்நிலையில் மாதவரம் ரவுண்டானா அருகில் சந்தேகத்திற்கிடமாக உயர்ரக இருசக்கர வாகனத்தில் நின்று கொண்டிருந்த மூவரை சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்து காவல் நிலையம் அழைத்து வந்து விசாரணை மேற்கொண்டனர்.

முதற்கட்டமாக போலீசார் விசாரணையில் வண்ணாரப்பேட்டை, கீரை தோட்டத்தை சேர்ந்த தமிழ்செல்வன் (வயது 24 ), முஹம்மத் ஷரீஃப் (வயது 20 ), வினோத்( வயது 19 ) ஆகிய மூவரும் வழிப்பறி சம்பவத்தில் ஈடுபடும் கூட்டாளிகள் என்பதும் ஏற்கனவே செவ்வாய்பேட்டையில் ஒரு நபரின் விலை உயர்ந்த R.1,5 இருசக்கர வாகனத்தை திருடி வண்ணாரப்பேட்டைக்கு வந்து கொண்டிருந்த போது வரும் வழியில் புழல், மாதவரம் ஆகிய பகுதிகளில் நள்ளிரவு நடந்து செல்வோரிடமும் பேருந்துக்காக காத்து நிற்பவர்களையும் மிரட்டி அவர்களின் செல்போன்களை பறித்துச் சென்று மோர்மார்க்கெட்டில் பாதி விலைக்கு விற்று பணமாக்கி கஞ்சா போதைக்கும், தனது காதலிக்கும் செலவழிப்பதாக போலீசார் விசாரணையில் தெரியவந்தது

பின்னர், இவர்கள் மூன்று பேரின் மீது வழக்குப் பதிவு செய்து அவர்களை கைது செய்து அவர்களிடமிருந்த விலை உயர்ந்த இருசக்கர வாகனத்தையும் 5 செல்போன்களையும் போலீசார் பறிமுதல் செய்து மாதவரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் போலீசார் அடைத்தனர்.

மேலும் இவர்கள் மீது வண்ணாரப்பேட்டை, மெரினா, ராயபுரம், பழைய வண்ணாரப்பேட்டை, பெரியபாளையம், ஏழு கிணறு ஆகிய காவல் நிலையங்களில் திருட்டு வழக்குகள் உள்ளதாக தெரியவந்தது.

குற்றவாளிகளைத் தேடி தீவிர விசாரணையில் ஈடுபட்ட மாதவரம் குற்றப்பிரிவு ஆய்வாளர் கோபிநாத் மற்றும் தனிப்படை போலீசார் குழுவினருக்கு சென்னை மாநகர காவல் ஆணையர் அருண் ஐபிஎஸ் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டார்.

## பணியில் உள்ள ஆசிரியர்களுக்கு ஜூலை 4, 5-இல் டெட் தேர்வு: ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவிப்பு

**சென்னை, பிப்.15:** தமிழகத்தில் அரசுப் பள்ளிகளில் பணியில் உள்ள ஆசிரியர்களுக்கு ஜூலை 4, 5 ஆகிய நாள்களில் ஆசிரியர் தகுதித் தேர்வு நடைபெறும். இந்தத் தேர்வுக்கு பிப்.18-ஆம் தேதி முதல் விண்ணப்பிக்கலாம் என ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவித்துள்ளது.



அரசுப் பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆசிரியராகப் பணிபுரியவும், பதவி உயர்வு பெறவும் ஆசிரியர் தகுதி தேர்வில் (டெட்) தேர்ச்சி பெறுவது கட்டாயம் என உச்சநீதிமன்றம் கடந்த ஆண்டு செப்.1-ஆம் தேதி தீர்ப்பளித்தது. மேலும், இதுவரை தேர்ச்சி பெறாதவர்கள் அடுத்த இரு ஆண்டுகளுக்குள் தேர்வெழுதி தேர்ச்சி பெற வேண்டும் என அந்தத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதையடுத்து தமிழகத்தில் 4 மாதங்களுக்கு ஒருமுறை வீதம் ஆண்டுக்கு 3 முறை சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வு அதாவது பணியில் உள்ள ஆசிரியர்களுக்கான டெட் தேர்வு நடத்தப்படும்.

2026-ஆம் ஆண்டுக்கான தேர்வுகள் ஜனவரி, ஜூலை, டிசம்பர் ஆகிய மாதங்களில் நடைபெறும் என பள்ளிக் கல்வித் துறை அறிவித்திருந்தது. அதே வேளையில் தேர்வுகளுக்கான தேதிகள் அறிவிக்கப்படவில்லை.

இந்த நிலையில், ஆசிரியர் தேர்வு வாரியம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிவிப்பு: பள்ளிகளில் பணியாற்றி வரும் ஆசிரியர்களுக்கான ஆசிரியர் தகுதித் தேர்வு ஜூலை 4, 5 ஆகிய நாள்களில் நடைபெறும். ஜூலை 4-இல் முதல் தாளுக்கான தேர்வும், ஜூலை 5-இல் 2-ஆம் தாளுக்கான தேர்வும் நடத்தப்படும்.

இந்தத் தேர்வுக்கு பிப்.18 முதல் ஏப்.10-ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம். பதிவேற்றம் செய்யப்பட்ட விண்ணப்பங்களில் ஏப்.11 முதல் 13 வரை திருத்தங்களை மேற்கொள்ளலாம். இதுதொடர்பான கூடுதல் தகவல்கள் ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் தொடர்புகொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணியில் உள்ள ஆசிரியர்களுக்கான டெட் தேர்வு வரும் ஜூலையில் நடைபெறவுள்ள நிலையில், ஏற்கெனவே கடந்த ஆண்டு நவ.15, 16 ஆகிய தேதிகளில் நடைபெற்ற வழக்கமான டெட் தேர்வை பணியில் உள்ள ஆசிரியர்கள் பலர் எழுதினர். அதில் பெரும்பாலானவர்கள் அதிக மதிப்பெண்ணுடன் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

தேர்ச்சி மதிப்பெண்... பள்ளிக் கல்வித்துறை நிகழாண்டு ஜன.28-ஆம் தேதி வெளியிட்ட அரசாணையின்படி, தமிழகத்தில் டெட் தேர்வுக்கு குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண் பிசி, பிசி-முஸ்லிம், எம்பிசி, டிஎன்சி, மாற்றுத்திறனாளிகளுக்கு 50 சதவீதமாகவும் (75 மதிப்பெண்), எஸ்சி, எஸ்சி-அருந்ததியர், எஸ்டி வகுப்பினருக்கு 40 சதவீதமாகவும் (60 மதிப்பெண்) நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பொதுப் பிரிவினருக்கான தேர்ச்சி மதிப்பெண் 60 சதவீதம் (90 மதிப்பெண்) ஆகும்.

மேலும், இந்த மதிப்பெண் குறைப்பு கடந்த நவம்பரில் நடைபெற்ற டெட் தேர்வுக்கும் பொருந்தும் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொலை வழக்கில் 16 பேர் விடுதலை: கீழமை நீதிமன்ற தீர்ப்பு ரத்து

**சென்னை, பிப்.15:** சென்னை திருவான்மியூரில் கடந்த 2010-ஆம் ஆண்டு நடந்த கொலை வழக்கில் 16 பேரை விடுதலை செய்து கீழமை நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பை சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்து உத்தரவிட்டது.



கடந்த 2010-ஆம் ஆண்டு ஜூன் 14-ஆம் தேதி, சென்னை திருவான்மியூரில் ஏழுமலை என்பவரை ஒரு கும்பல் கொலை செய்தது. முன்விரோதம் காரணமாக நிகழ்ந்த இந்த கொலை தொடர்பாக, 16 பேர் கைது செய்யப்பட்டனர்.

வழக்கை விசாரித்த சென்னை மாவட்ட 7-ஆவது கூடுதல் அமர்வு நீதிமன்றம், போதுமான ஆதாரங்கள் இல்லை எனக்கூறி வழக்கில் இருந்து அனைவரையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து காவல் துறை தரப்பில் அரசு கூடுதல் குற்றவியல் வழக்குரைஞர் தாமோதரன் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தார். இந்த வழக்கு நீதிபதிகள் பி.வேல்முருகன், எம்.ஜோதிராமன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. வழக்கு விசாரணையின்போது, வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை நீதிபதிகள் மறு ஆய்வு செய்தனர்.

திட்டமிட்டு நிகழ்ந்த இந்தக் கொலையில் இருந்து குற்றவாளிகளை விடுதலை செய்ய முடியாது என கருத்து தெரிவித்திருந்தனர். இதனிடையே, இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட 16 பேரில் 7 பேர் இறந்துவிட்டதால், மீதமுள்ள 9 பேரை நேரில் ஆஜராக நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

அதன்படி, குற்றம்சாட்டப்பட்டவர்களில் ஸ்டீபன்ராஜ் மற்றும் சந்துரு ஆகியோர் மட்டும் ஆஜராகினர், அப்பு, சரவணன் உள்ளிட்ட 7 பேர் ஆஜராகவில்லை. இதையடுத்து நீதிமன்றத்தில் நேரில் ஆஜரான இருவருக்கும் ஆயுள் தண்டனையும், தலா ரூ.1000 அபராதமும் விதித்து தீர்ப்பளித்தனர். 7 பேருக்கும் எதிராக பிடிவாரண்ட் பிறப்பித்த நீதிபதிகள், அவர்களை வரும் பிப். 16-ஆம் தேதி நேரில் ஆஜர்படுத்த போலீஸாருக்கு உத்தரவிட்டனர்.

## தமிழகம் முழுவதும் தீவிரம் அடைகிறது- டாஸ்மாக் மதுக்கடைகளை மூடி ஊழியர்கள் 17-ந்தேதி போராட்டம்

**சென்னை, பிப்.15:** டாஸ்மாக் ஊழியர்கள் பணி நிரந்தரம், காலமுறை ஊதியம், ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 1-ந்தேதி முதல் காத்திருப்பு போராட்டங்களை நடத்தி வருகிறார்கள்.




இந்தப் போராட்டத்தை சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.சி. பாட்டாளி, விடுதலை சிறுத்தை உள்ளிட்ட முக்கிய தொழிற்சங்கங்கள் கூட்டாக இணைந்து நடத்துகின்றன. டாஸ்மாக் ஊழியர்கள் போராட்டத்திற்கு அரசியல் கட்சி தலைவர்களும் சிலர் ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் போராட்டத்தை தீவிரப்படுத்த திட்டமிட்டுள்ளனர். அரசு இதுவரையில் அழைத்து பேசாததால் அடுத்த கட்டமாக 17-ந்தேதி முதல் காலவரையற்ற கடை அடைப்பு போராட்டத்தை நடத்த முடிவு செய்துள்ளனர். போராட்டம் குறித்த நோட்டீஸ் டாஸ்மாக் மேலாண்மை இயக்குநருக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

நாளை மறுநாள் (16-ந்தேதி) இரவு 10 மணிக்கு டாஸ்மாக் கடைகளை மூடி சாவியை நிர்வாகத்திடம் கொடுத்து விடுவதாகவும் 17-ந்தேதியில் இருந்து பணிக்கு செல்ல மாட்டோம் என்றும் கூட்டமைப்பு சார்பில் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து தொழிற்சங்க கூட்டமைப்பு நிர்வாகிகள் கூறியதாவது:-

தமிழ்நாட்டில் 4,749 டாஸ்மாக் கடைகள் தற்போது செயல்பட்டு வருகின்றன. இதில் 23 ஆயிரம் ஊழியர்கள் பணியாற்றி வருகிறார்கள். மிகவும் குறைந்த சம்பளத்தில் 23 ஆண்டுகளாக பணியாற்றி வரும் இவர்களை பணி நிரந்தரம் செய்து காலமுறை ஊதியம் வழங்க வேண்டும் என்பது முக்கியமான கோரிக்கையாகும்.

14 நாட்கள் தொடர்ந்து போராடிவரும் நிலையில் எங்களை இதுவரையில் அரசு அழைத்துப் பேசவில்லை. அதனால் பணி புறக்கணிப்பு போராட்டத்தை எடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கிறோம். மேலும் அனைத்து மாவட்டங்களிலும் காலிபாட்டில் ஸ்டிக்கர்களை ஒப்படைக்கவும் முடிவு செய்துள்ளோம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

இந்த போராட்டத்தில் அ.தி.மு.க. அண்ணா தொழிற்சங்கம் கலந்து கொள்ளுமா என்று அதன் மாநில செயலாளர் சிவகுமாரிடம் கேட்டதற்கு, இது பற்றி தலைமையிடம் கேட்டு முடிவு செய்வதாக தெரிவித்தார்.

டாஸ்மாக் கடைகளில் பணிபுரியும் மேற்பார்வையாளர்கள், விற்பனையாளர்கள், உதவியாளர்கள் இந்தப் போராட்டத்தில் பங்கேற்பதால் பாதிப்பு ஏற்படக்கூடும். ஆளுங்கட்சி தொழிற்சங்கமான தொ.மு.ச. தொழிலாளர்கள் இதில் பங்கேற்பார்களா என்று தெரியவில்லை.

தொழிற்சங்க கூட்டமைப்பு சார்பில் நடைபெறும் காலவரையற்ற கடையடைப்பு போராட்டத்தை முறியடிக்க டாஸ்மாக் நிர்வாகம் என்ன நடவடிக்கைஎடுக்கப்போகிறது என்பது ஓரிரு நாட்களில் தெரிய வரும்.

## உடுமலை அரசு மருத்துவமனையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் திடீர் ஆய்வு



**உடுமலை, பிப்.15:** திருப்பூர் மாவட்டம் உடுமலை அரசு மருத்துவமனைக்கு தினமும் உடுமலை மற்றும் சுற்றுவட்டார கிராம மக்கள் , மலைவாழ் மக்கள் வந்து சிகிச்சை பெற்று செல்கின்றனர். இந்தநிலையில் இன்று திடீரென தமிழ்நாடு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் உடுமலை அரசு மருத்துவமனையில் திடீரென ஆய்வு பணியில் ஈடுபட்டார்.

மருத்துவமனைக்குட்பட்ட அவசர சிகிச்சை பிரிவு, மகப்பேறு பிரிவு, உணவு தயாரிக்கும் இடம் உள்பட பல்வேறு பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் காயம் அடைந்தவருக்கு செவிலியர் சிகிச்சை அளிக்காமல் மருத்துவ பணியாளர் சிகிச்சை அளித்து கொண்டிருந்ததை பார்த்து அதிர்ச்சியடைந்தார்.

உடனே செவிலியரை அழைத்து அறிவுரைகள் கூறி சிகிச்சை அளிக்க உத்தரவிட்டார்.

மேலும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் எந்திரம் பராமரிப்பு இல்லாமல் இருந்தது குறித்து மாவட்ட மருத்துவ இயக்குனரிடம் கேட்டறிந்தார். பொதுமக்கள் அதிகம் வந்து செல்லும் மருத்துவமனையில் 8 மாத காலமாக எந்திரம் சரி செய்யப்படாமல் இருப்பது ஏன்? அவ்வப்போது ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அவசர சிகிச்சை பகுதிகளில் ஆண்கள், பெண்கள் என அனைவருக்கும் ஒரே இடத்தில் ஏன் சிகிச்சை அளிக்கப்படுகின்றது. அரசு மருத்துவமனையை நீங்கள் ஆய்வு செய்தீர்களா? என கேள்வி எழுப்பினார். மாதந்தோறும் அரசு மருத்துவமனைக்கு வருகை புரிந்து அனைத்து பகுதிகளையும் ஆய்வு செய்ய வேண்டும். அவசர சிகிச்சை பிரிவு முன்புறம் ஏன் வீல் சேர் வைக்கவில்லை. இதுபோன்ற செயல்கள் இனி நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என உத்தரவிட்டார்.

உடுமலை அருகே நேற்றிரவு சிறுவனை சிகிச்சைக்காக அழைத்து சென்ற போது மடத்துக்குளம் அரசு மருத்துவமனையில் டாக்டர் இல்லை என்று பொதுமக்கள் புகார் தெரிவித்தனர். இந்தநிலையில் இன்று உடுமலை அரசு மருத்துவமனையில் அமைச்சர் திடீரென ஆய்வு செய்த சம்பவம் மருத்துவ பணியாளர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## மகா சிவராத்திரி: எழும்பூரில் இருந்து திருவண்ணாமலை, வேலூருக்கு சிறப்பு ரெயில்

**சென்னை, பிப்.15:** மகா சிவராத்திரி நாளை நடைபெறுவதால் சிவன் கோவிலில் சிறப்பு வழிபாடு நடக்கிறது. திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலில் லட்சக்கணக்கான பக்தர்கள் கூடுவது வழக்கம்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து திருவண்ணாமலைக்கு பஸ் மற்றும் ரெயில்களில் செல்கிறார்கள். கூட்ட நெரிசலை குறைப்பதற்காக சிறப்பு பஸ், ரெயில்கள் இயக்கப்படுகிறது.

சென்னைஎழும்பூரில்இருந்து திருவண்ணாமலைக்கு சிறப்பு ரெயில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ரெயில் நாளை (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.15 மணிக்கு எழும்பூரில் இருந்து புறப்பட்டு திருவண்ணாமலைக்கு பிற்பகல் 3 மணிக்கு சென்றடைகிறது.

வருகிற 16-ந்தேதி இதே ரெயில் திருவண்ணாமலையில் இருந்து அதிகாலை 4 மணிக்கு புறப்பட்டு எழும்பூருக்கு காலை 9.15 மணிக்கு வந்து சேரும்.

இதேபோல எழும்பூரில் இருந்து வேலூர் கண்டோண்ட்மென்ட்டுக்கு முன்பதிவு இல்லாத மெமு எக்ஸ்பிரஸ் சிறப்பு ரெயில் புறப்படுகிறது. இந்த ரெயில் எழும்பூரில் இருந்து நாளை மதியம் 12 மணிக்கு புறப்பட்டு மாலை 6 மணிக்கு வேலூர் சென்றடைகிறது.

பின்னர் 16-ந்தேதி வேலூர் கண்டோண்ட்மென்ட்டில் இருந்து அதிகாலை 3 மணிக்கு புறப்பட்டு காலை 9.15 மணிக்கு தாம்பரம் வந்து சேருகிறது. இந்த 2 ரெயில்களுக்கான முன்பதிவு இன்று மதியம் 12 மணிக்கு தொடங்கியது.

இதே போல விழுப்புரம்-திருவண்ணாமலை இடையேயும் விழுப்புரம்- வேலூர் இடையேயும் முன்பதிவு இல்லாத மெமு சிறப்பு ரெயில்கள் இயக்கப்படுகின்றன.

## சென்னையில் இன்று (15.02.2026) மின்தடை ஏற்படும் இடங்கள்...

**சென்னை, பிப்.15:** சென்னையில் பராமரிப்பு பணிகள் காரணமாக ஒரு சில பகுதிகளில் மின் தடை செய்யப்படுகிறது.

காலை 9 மணி முதல் பிற்பகல் 2 வரை மின் தடை செய்யப்படும். பராமரிப்பு பணி முடிவடைந்தவுடன் மின் விநியோகம் கொடுக்கப்படும்.

அந்த வகையில், நாளை மின் தடை ஏற்படும் பகுதிகள் குறித்து தமிழ்நாடு மின்சார வாரியம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதன்படி, சென்னையில் இன்று (15.02.2026) காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மின் வாரிய பராமரிப்பு பணி காரணமாக பின்வரும் இடங்களில் மின் விநியோகம் நிறுத்தப்படும். அதன்படி,

அம்பத்தூர் இன்டஸ்டிரியல் எஸ்டேட்: நியூ டைனி செக்டர், போஸ்ட் ஆபீஸ் ரோடு 2வது மற்றும் 5வது தெரு, அம்பிட் ஐடி பார்க் ரோடு, 2வது மெயின் ரோடு ஸ்பூத் பேஸ் ஆகிய இடங்கள்.

அம்பத்தூர் சிட்கோ: மாரியம்மன் கோவில் தெரு, குலக்கரை தெரு, கண்ணன் கோவில் தெரு, ஆவின் பிரதான சாலை, ஈபி சாலை 1 முதல் 4வது தெரு, வடக்கு கட்டம் 31ஏ சாலை, வடக்கு கட்டம் 12 மற்றும் 13வது தெரு, கொரட்டூர் டைனி செக்டர் ஆகிய பகுதிகள்.

# 3 ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம்

**சென்னை, பிப்.15:** ஐபிஎஸ் அதிகாரிகள் 3 பேர் பணியிடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதுகுறித்து உள்துறை செயலர் தீரஜ் குமார் வெளியிட்டுள்ள உத்தரவில் கூறியிருப்பதாவது: தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி சிலம்பரசன், டிஜிபி அலுவலகத்தில் இயங்கி வரும் சட்டம் - ஒழுங்கு உதவி ஐஜியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

திருநெல்வேலி மேற்கு துணை ஆணையர் மதன், தூத்துக்குடி எஸ்.பி-யாக பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். மேலும், திருநெல்வேலி தலைமையிட துணை ஆணையர் விஜயகுமார், திருநெல்வேலி மேற்கு துணை ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கூடுதலாக தலைமையிடத்தையும் கவனித்துக் கொள்வார்.

# 3 அரசு மருத்துவக் கல்லூரிகளில் தலா 50 இடம் கூடுதலாக கோரி சுகாதாரத் துறை மனு

**சென்னை, பிப்.15:** தமிழகத்தில் 3 அரசு மருத்துவக் கல்லூரிகளில் தலா 50 இடங்களை அதிகரிக்குமாறு தேசிய மருத்துவ ஆணையத்திடம் தமிழக சுகாதாரத் துறை விண்ணப்பித்துள்ளது.

நாமக்கல், திருவள்ளூர், திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரிகளில் தலா 50 எம்பிபிஎஸ் இடங்களை அதிகரிக்குமாறு தேசிய மருத்துவ ஆணையத்திடம் தமிழ்நாடு மாநில மருத்துவக் கல்வி, ஆராய்ச்சி இயக்குநரகம் விண்ணப்பித்துள்ளது.

அதற்கு தேசிய மருத்துவ ஆணையம் ஒப்புதல் அளித்தால், நடப்பு ஆண்டு மருத்துவக் கலந்தாய்வில் அந்த கூடுதல் இடங்கள் சேர்க்கப்படும்.

தேவையான வசதிகள் உள்ளனதமிழகத்தில் கடந்த ஆண்டு 5,200 அரசு எம்பிபிஎஸ் இடங்களுக்கும், மதுரை எய்ம்ஸ் கல்லூரியில் 50 இடங்களுக்கும் மாணவர் சேர்க்கை நடத்தப்பட்டது.

ராமநாதபுரம் மருத்துவக் கல்லூரியிலும் கூடுதலாக இடங்களை பெறுவதற்குத் தேவையான வசதிகள் உள்ளன.

ஆனால், தற்போது மதுரை எய்ம்ஸ் மாணவர்கள் அங்கு படித்து வருவதால், அந்த கல்லூரிக்கு கூடுதல் இடங்கள் கேட்டு விண்ணப்பிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சிபிஎஸ்இ 12-ஆம் வகுப்பு தேர்வு: முடிவுக்குப் பிறகு மதிப்பெண் சரிபார்ப்பு நடைமுறை ரத்து

**சென்னை, பிப்.15:** மத்திய இடைநிலை கல்வி வாரிய (சிபிஎஸ்இ) பொதுத் தேர்வுகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனை மேம்படுத்தும் நோக்கில், நிகழாண்டு முதல் 12-ஆவது வகுப்பு சிபிஎஸ்இ தேர்வு முடிவுகள் வெளியான பின்னர், மதிப்பெண்களை சரிபார்க்கும் நடைமுறை கைவிடப்பட உள்ளது.

இதுகுறித்து சிபிஎஸ்இ தேர்வுகள் கட்டுப்பாட்டாளர் சன்யம் பரத்வாஜ் கூறுகையில், 'மதிப்பெண் கூட்டல் போன்றவற்றில் ஏற்படும் குளறுபடிகள் காரணமாக, தேர்வு முடிவுகள் வெளியான பின்னர், மதிப்பெண்களை சரிபார்க்க மாணவர்கள் விண்ணப்பிப்பர்.

விடைத்தாள்களை கைகளால் திருத்துவதற்குப் பதிலாக கணினி வழியாக டிஜிட்டல் முறையில் திருத்துவதன் மூலம், அவற்றைத் திருத்துவதில் ஏற்படும் பிழைகள் களையப்படும்.

இந்நிலையில், விடைத்தாள்களை டிஜிட்டல் வழியில் திருத்தி மதிப்பிடும் முறைக்கு சிபிஎஸ்இ முழுமையாக மாறுவதால், நிகழாண்டு முதல் 12-ஆவது வகுப்பு சிபிஎஸ்இ பொதுத் தேர்வு முடிவுகள் வெளியான பின்னர், மதிப்பெண்களை சரிபார்க்கும் நடைமுறை கைவிடப்பட உள்ளது' என்றார். எனினும் 10-ஆம் வகுப்பு பொதுத் தேர்வு விடைத்தாள்கள் நேரடியாக கைகளால் திருத்தும் முறையே தொடர உள்ளது.

# மனைவி பிரிந்து சென்றதால் பூச்சி மருந்து குடித்து தற்கொலை செய்து கொண்ட கணவன்

**மறைமலைநகர், பிப்.15:** மறைமலைநகர் கீழக்கரணை பகுதியைச் சேர்ந்தவர் கண்ணன். இவர் அந்தப் பகுதியில் சொந்தமாக வெல்டிங் கடை வைத்து நடத்தி வந்தார். இவருக்கு ஜாஸ்மின் என்ற மனைவியும் இரண்டு குழந்தைகளும் உள்ளனர்.

இதற்கிடையே, கண்ணனுக்கு மது அருந்தும் பழக்கம் இருந்ததாகக் கூறப்படுகிறது. இதனால் தினந்தோறும் போதையில் வீட்டிற்கு வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இது தொடர்பாக கணவன் - மனைவி இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்துள்ளது.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு கண்ணன் வழக்கம் போல் அதிக மது போதையில் வீட்டிற்கு வந்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த ஜாஸ்மின் அவரை கடுமையாகக் கண்டித்துள்ளார். பின்னர் கோபித்துக் கொண்டு தனது குழந்தைகளுடன் உறவினர் வீட்டிற்குச் சென்றுவிட்டார்.

மனைவி கண்டித்துவிட்டுச் சென்றதால் கடும் மன உளைச்சலுக்கு ஆளான கண்ணன் பூச்சி மருந்தை குடித்துத் தற்கொலை செய்து கொண்டார். வீட்டில் யாரும் இல்லாத நிலையில், அவரது உடல் வீட்டிற்குள்ளேயே கிடந்தது.

தொடர்ந்து வீடு பூட்டப்பட்டிருந்த நிலையில் இரண்டு நாட்கள் கழித்து வீட்டிலிருந்து கடுமையான துர்நாற்றம் வீசியது. இதனால் அதிர்ச்சியடைந்த அக்கம் பக்கத்தினர் உடனடியாக மறைமலைநகர் காவல் நிலையத்திற்குத் தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார், வீட்டின் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தனர். அங்கு கண்ணன் உடல் அழுகிய நிலையில் மீட்கப்பட்டது. போலீசார் உடலைக் கைப்பற்றி பிரேதப் பரிசோதனைக்காகச் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இச்சம்பவம் குறித்து மறைமலைநகர் போலீசார் வழக்குப் பதிவு செய்து, குடும்பத் தகராறு தவிர வேறு ஏதேனும் காரணங்கள் இருக்கிறதா என்ற கோணத்தில் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழகம், புதுவையில் வெப்பம் அதிகரிக்கும்- வானிலை மையம் அறிவிப்பு

**சென்னை, பிப்.15:** பூமத்திய ரேகைக்கு அருகில் உள்ள இந்திய பெருங்கடலின் கிழக்குப் பகுதிகள் மற்றும் அதன் ஒட்டிய தென்கிழக்கு வங்க கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி அதே பகுதிகளில் நாளை உருவாக கூடும். கிழக்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழகம் மற்றும் புதுவை காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

18-ந்தேதி மற்றும் 19-ந்தேதி தமிழகத்தில் ஒரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, ராணிப்பேட்டை, வேலூர், சேலம், நாமக்கல், திண்டுக்கல், நீலகிரி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் ஒரு இடங்களில் இன்று அதிகாலை பனிமூட்டம் காணப்பட்டது.



சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் ஓர் இடங்களில் நாளை அதிகாலை வேளையில் மிதமான பனிமூட்டம் காணப்படும். காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர் மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் நாளை லேசான பனி மூட்டம் இருக்கும்.

சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர் மற்றும் புதுவையில் ஒரு இடங்களில் 16-ந்தேதி அதிகாலை வேளையில் மிதமான பனி மூட்டமும் காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, வேலூர் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் ஒரு இடங்களில் லேசான பனிமூட்டமும் காணப்படும்.

17-ந்தேதி சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, விழுப்புரம் மாவட்டங்களில் ஓர் இடங்களில் அதிகாலை வேளையில் மிதமான பனிமூட்டம் காணப்படும். காஞ்சிபுரம், கரூர், நாமக்கல், ஈரோடு, பெரம்பலூர், ராணிப்பேட்டை, வேலூர் மாவட்டங்களில் லேசான பனிமூட்டமும் இருக்கும்.

18-ந்தேதி சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் அதிகாலை நேரத்தில் மிதமான பனிமூட்டம் காணப்படும். காஞ்சிபுரம், கரூர், நாமக்கல், ஈரோடு, பெரம்பலூர்,ராணிப்பேட்டை, வேலூர் மாவட்டங்களில் ஒரு இடங்களில் லேசான பனிமூட்டம் நிலவும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இதே போல வெப்ப நிலையும் தமிழகம், புதுவையில் இன்றும், நாளையும் அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பள்ளி மாணவர்கள் தயாரித்து விண்ணில் ஏவிய சிறிய ரக செயற்கைக்கோள்! அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் பாராட்டு!

**சிவகங்கை, பிப்.15:** சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அருகே உள்ள அரியக்குடி அரசு மேல்நிலைப்பள்ளியில் படிக்கும் 11- ஆம் வகுப்பு மாணவர்கள் 13 பேர் கொண்ட குழுவினர் தயாரித்து வடிவமைத்த விகோ சாட்-1 என்ற சிறிய ரக செயற்கைக்கோள் பலூன் மூலம் விண்ணில் ஏவும் நிகழ்வு வெள்ளிக்கிழமை நடைபெற்றது.




இந்தப் பள்ளியின் மாணவர் வி. விஷ்ணு தலைமையில் ஜி. பிபின்குமார், யு. மனோஜ்குமார், வி. ஹரிஷ்வர், எஸ். மிதுன், வி. முத்துக்கருப்பன், ஏ. ரஸீடு அகமது, என். ஆசிக் ரகுமான், எஸ். முத்துக்குமார், எஸ். சோமேஸ்வர், பி. அபிமன்யு, எஸ். ஹரிகரன், ஆர். பாவேந்தன் ஆகிய மாணவர்களைக் கொண்ட குழுவினர் இந்த செயற்கைக்கோளை கடந்த 6 மாதங்களாக வடிவமைத்தனர். இதை பள்ளியின் விளையாட்டு மைதானத்தில் பலூன் மூலம் விண்ணில் ஏவும் நிகழ்வு வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

அரியக்குடி அரசு மேல்நிலைப் பள்ளியில் 11-ஆம் வகுப்பு மாணவர்களால் வடிவமைக்கப்பட்ட விகோ சாட்-1 என்ற சிறிய ரக செயற்கைக் கோளை பலூன் மூலம் வெள்ளிக்கிழமை விண்ணில் ஏவும் நிகழ்வில் பங்கேற்று மாணவர்களை பாராட்டிய கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன். உடன் பள்ளித் தலைமையாசிரியர் வி.ஜே. பிரிட்டோ உள்ளிட்டோர்.

அரியக்குடி அரசு மேல்நிலைப் பள்ளியில் 11-ஆம் வகுப்பு மாணவர்களால் வடிவமைக்கப்பட்ட விகோ சாட்-1 என்ற சிறிய ரக செயற்கைக் கோளை பலூன் மூலம் வெள்ளிக்கிழமை விண்ணில் ஏவும் நிகழ்வில் பங்கேற்று மாணவர்களை பாராட்டிய கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன். உடன் பள்ளித் தலைமையாசிரியர் வி.ஜே. பிரிட்டோ உள்ளிட்டோர்.

இதுகுறித்து மாணவர் வி. விஷ்ணு கூறியதாவது: இந்தப் பள்ளி ஆசிரியர்களின் வழிகாட்டுதலின்படி 13 மாணவர்களைக் கொண்ட குழுவினர் இந்த விகோ சாட்-1 என்ற செயற்கைக் கோளை வடிவமைத்தோம்.

இது பலூன் மூலம் விண்ணில் ஏவப்பட்டதும் பூமியிலிருந்து 22 கி.மீ. உயரத்துக்குச் சென்றது. இந்த செயற்கைக்கோள் காற்றில் உள்ள பூஞ்சையை கண்டறிய உதவும். இதனால் காற்றின் தன்மையை அறிந்து விவசாயிகள் தங்களது பயிர்களை காத்துக் கொள்ளலாம் என்றார் அவர்.

இந்த நிகழ்வில் கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன், காரைக்குடி தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் எஸ். மாங்குடி, சிவகங்கை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் பாலதண்டாயுதபாணி, மாவட்டக் கல்வி அலுவலர் (தேவகோட்டை) மாரிமுத்து, பள்ளியின் தலைமையாசிரியர் வி.ஜே. பிரிட்டோ, ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் திரளாகக் கலந்துகொண்டனர். மாணவர்களின் இந்த முயற்சியை இந்திய விண்வெளி ஆய்வு மைய முன்னாள் இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை விடியோ மூலம் பதிவிட்டு பாராட்டுகளை தெரிவித்தார்.

# வள்ளியூரில் 3 நாட்களுக்கு அதிரடி அறிவிப்பு: காதலர் தினத்தை முன்னிட்டு ஒரு ரூபாய்க்கு 'டீ'


**நெல்லை, பிப்.15:** நெல்லை மாவட்டம் வள்ளியூரை சேர்ந்தவர் ஜெயக்குமார். இவர் அப்பகுதியில் டீக்கடை நடத்தி வருகிறார்.

இவர் காதலர் தினத்தை முன்னிட்டு நேற்று தொடங்கி 3 நாட்களுக்கு அதிரடி அறிவிப்பு ஒன்றை அறிவித்துள்ளார். அதன் அடிப்படையில் ஒரு டீ 1 ரூபாய் மட்டுமே என்று கூறி கடை முன்பு விளம்பர பலகையும் வைத்துள்ளார்.

இந்த அறிவிப்பு விளம்பர பலகையாக வைக்கப்பட்டதில் இருந்தே அப்பகுதி மக்கள் மற்றும் இளைஞர்களிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது.

இதுகுறித்து ஜெயக்குமார் கூறுகையில், எங்கள் பகுதியில் பள்ளி, கல்லூரி மாணவர்கள், பஸ் பயணிகள் மற்றும் சினிமா தியேட்டருக்கு வருபவர்கள் என மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும்.

காதலர்தினத்தை முன்னிட்டு அனைவரும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த சலுகையை வழங்குகிறேன். சுத்தமான பசும்பால் மற்றும் இஞ்சி சேர்த்து சுவையாக தயாரிக்கப்படும் இந்த டீ, அனைவரையும் சென்றடைய வேண்டும் என்பதே எனது ஆசை.




காதல் என்பது வெறும் டீன் ஏஜ் வயதினருக்கோ அல்லது இளைஞர்களுக்கோ மட்டுமே உரித்தானது அல்ல. அது 20 வயது முதல் 80 வயது வரை உள்ள அனைத்து தரப்பினருக்குமானது. காதல் என்பது புனிதமானது. அது வெறும் வயது சம்பந்தப்பட்டது அல்ல. காதலை யாரும் கொச்சையாக பார்க்க வேண்டாம். காதல் என்ற உணர்வை அன்போடு அணுக வேண்டும். மக்களிடையே அன்பும், மகிழ்ச்சியும் பெருக வேண்டும் என்பதற்காகவே இந்த முயற்சியை எடுத்தோம்.

நேற்று மட்டும் சுமார் 150-க்கும் மேற்பட்டோர் வந்தனர். இன்று 300 பேரை தாண்டி மக்கள் வந்து டீ அருந்தி செல்கின்றனர். இது வெறும் லாபத்திற்காக செய்வது அல்ல, இந்த காதலர் தினத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற விருப்பமே காரணம் என்று நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

காதலர் தினத்தை ஒரு வணிக நோக்கமாக பார்க்காமல், சமூகத்தில் அன்பை பகிரும் ஒரு வாய்ப்பாக பயன்படுத்தும் இவரின் செயலை இளைஞர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் பாராட்டி வருகின்றனர்.

## அரசியல் கார்னர்

# தமிழக சட்டப்பேரவை தேர்தல்: விருப்ப மனு சமர்ப்பிக்க தவெக பிப்.20 வரை கால அவகாசம்!

**சென்னை, பிப்.15:** வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட தவெகவினர் விருப்ப மனுவை சமர்ப்பிக்கக் கால அவகாசம் பிப்.20-ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் என்.ஆனந்த் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் 234 தொகுதிகளிலும் வேட்பாளராகப் போட்டியிட விரும்புவோர் தங்களுக்கான விருப்ப மனுவைப் பெறுவதற்கும் அதனைச் சமர்ப்பிப்பதற்குமான கடைசித் தேதி நேற்று (14.02.2026) என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், கட்சியின் பல்வேறு நிகழ்ச்சிகள் காரணமாக, வழங்கப்பட்ட கால அவகாசத்திற்குள் பெரும்பாலானோரால் விருப்ப மனுவைச் சமர்ப்பிக்க முடியாமல் போனதாகத் தெரிவித்து வருகின்றனர்.

எனவே அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, விருப்ப மனுவைப் பூர்த்தி செய்து அளிப்பதற்கான கால அவகாசம் நீட்டிக்கப்படுகிறது.

அதன்படி, வரும் 20-ம் தேதி (20.02.2026) வரை கழகத் தோழர்கள் தங்களது விருப்ப மனுவைத் தலைமை நிலையச் செயலகத்தில் சமர்ப்பிக்கலாம். விருப்ப மனுக்களைச் சமர்ப்பிக்க அதுவே கடைசி நாள் ஆகும்" இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தி.மு.க அரசு ரூ.5 ஆயிரம் அல்ல ரூ.50 ஆயிரம் கொடுத்தாலும் அ.தி.மு.க கூட்டணியே வெற்றி பெறும்- டி.டி.வி. தினகரன்

**மதுரை, பிப்.15:** மதுரை நாகமலை புதுக்கோட்டையில் அம்மா மக்கள் முன்னேற்ற கழக செய்தி தொடர்பாளர் வீரவெற்றி பாண்டியன் இல்ல திறப்பு விழா நடைபெற்றது. இதில் அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் கலந்து கொண்டு புதிய வீட்டை திறந்து வைத்தார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-



விஜய், திரிஷா குறித்து நயினார் நாகேந்திரன் கூறியது, அவரது தனிப்பட்ட விமர்சனம். இருந்தாலும் அவர் தனிப்பட்ட விமர்சனத்தை தவிர்ப்பது நல்லது. மகளிர் உரிமை தொகை ரூ.5 ஆயிரம் அல்ல, ரூ.50 ஆயிரம் கொடுத்தாலும், அ.தி.மு.க கூட்டணியே வெற்றி பெறும். தி.மு.க. அரசு முடிவுக்கு வந்துவிடும்.


கூலிப்படை தான் தமிழ்நாட்டில் உருவாகி உள்ளது. போதைப்பொருள் பழக்கம் அதிகமாகி உள்ளது. தி.மு.க. ஆட்சியில் யாருக்கும் பாதுகாப்பு இல்லை. குழந்தைகள் முதல் மூதாட்டி வரை பாலியல் நடக்கிறது. அம்மாவின் தொண்டர்கள் எல்லாம் ஓர் அணியில் இணைந்து விட்டோம் என்ற பயம் வந்துவிட்டது.

தேசிய ஜனநாயக கூட்டணி பலமாக உள்ளது. புதிய கட்சிகள் இணைவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவே தெரிகிறது. அ.தி.மு.க. தலைமையில் தேசிய ஜனநாயக கூட்டணி அமைந்துள்ளது. காங்கிரஸ் உண்மையில் தி.மு.க. கூட்டணியில் இருக்க போகிறார்களா, இல்லையா என்பதை எதிர்பார்த்து கொண்டிருக்கிறார்கள்.

எங்கள் கூட்டணியில் எந்த குழப்பமும் ஏற்படாது. அ.ம.மு.க. குக்கர் சின்னத்தில் போட்டியிடும், அதிகாரத்தில் பங்கு கேட்பது எங்கள் கட்டிஷனில் இல்லை. அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் தொகுதியில் தோற்கடிக்க சபரீசன் திட்டமா என்ற கேள்விக்கு, சபரீசன் அல்ல மாரீஸ்ஸன் வந்தாலும் கவலை இல்லை, தமிழ்நாட்டில் இதுவரை கூட்டணி ஆட்சிக்கு மக்கள் அனுமதி தந்ததில்லை, இந்த தேர்தலில் என்ன நடக்கும் என்பதை பார்ப்போம் என்றார்.

# பெண்களைக் கண்ணியத்துடன் பேசுவதும், நடத்துவதுமே நாகரீக அரசியல்- தமிழச்சி தங்கபாண்டியன்

**சேலம், பிப்.15:** சேலம் மாவட்ட த.வெ.க. நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம் சீலநாயக்கன் பட்டி பைபாஸ் சாலையில் உள்ள தாளமுத்து நடராஜன் திடலில் நடைபெற்றது.



அண்ணா தொடங்கிய கட்சியை மு.க. ஸ்டாலின் வைத்துள்ளார். அதிமுக தொடங்கிய கட்சியை எடப்பாடி பழனிசாமி வைத்துள்ளார் என விஜய் கூறியுள்ளது தொடர்பாக தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரனிடம் கேள்வி கேட்கப்பட்டது.

அதற்கு பதிலளித்த நயினார் நாகேந்திரன்,"பாவம், அவர் அனுபவமே இல்லாதவர். முதலில் வீட்டில் இருந்து வெளியே வர வேண்டும். திரிஷாவிடம் இருந்து வெளியே வரணும். வெளியில் வந்தால்தான் எல்லாமே நடத்த முடியும்" என்றார்.

நயினார் நாகேந்திரனின் கருத்துக்கு தவெக தரப்பில் கடும் கண்டனங்கள் எழுந்து வருகிறது. மேலும், நயினார் நாகேந்திரனின் பேச்சிற்கு பல்வேறு அரசியல் கட்சியினரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், தவெக தலைவர் விஜய் குறித்த நயினார் நாகேந்திரனின் அநாகரிக விமர்சனத்திற்கு திமுக எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் தள பக்கத்தில் கூறியிருப்பதாவது:-

இந்தியாவை ஆளும் கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர், அரசியல் கருத்துகளைச் சொல்லும்போது, பொதுவெளியில் பயணிக்கும் பெண்ணைப் பற்றி, அவதூறாகப் பேசுவது அழகல்ல.

பெண்களைக் கண்ணியத்துடன் பேசுவதும், நடத்துவதுமே நாகரீக அரசியல் ஆகும்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com